KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 18 ஏப்ரல் 2025 இதழ்:- 16

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரவின் ஆக்ரோஷமான உரை!
## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு தீர்வு காண்பது இலகு!
## பிரச்சனை கொடுக்கும் வடக்கு தெற்கு அரசியல்வாதிகள் நீக்கப்பட வேண்டும்!



தையிட்டி, திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகு. இந்த பிரச்சினையை மையப் படுத்தியதாக செயற்படும் வடக்கு அரசியல் மற்றும் தெற்கு அரசியல் நீக்கப்பட வேண்டும். அரசியல் வாதிகள் தான் திஸ்ஸ விகாரை பிரச்சனைக்கு தீர்வு காண இடமளிப்பதில்லை. இனவாதம் இவர்களுக்கு தேவை. தொல்பொருள் ஒன்று கிடைத்தால் அது பௌத்தமா அல்லது இந்துவா என்று ஆராய்வது தவறு. இனவாதம் தோற்றம் பெறுவதை தடுக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்க பின்வாங்க போவதில்லை (3ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## பிள்ளையானின் கைதால் ரணில் - கம்மன்பில கலக்கம் அடைவது ஏன்? ரில்வின் கேள்வி!



பிள்ளையான் எனப்படும் சிவநேசத் துரை சந்திரகாந்தனை கைது செய்தவுடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஏன் கலக்கமடைய வேண் டும். பல குற்றங்களின் பின்னணியில் அரசியல் உள்ளது. உதய கம்மன்பில வின் சிங்கள, பௌத்தவாதம் தற்போது

ஈழநாடு
எதிர்பாருங்கள்! பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!



## அநுரா யாரோடு? - ஊர் யாரோடு?
### அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் எழுதிய 2 கட்டுரை

## அநுர -மோடி பற்றிக் கொண்ட கரங்களுக்குப் பின்னால்.....

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com


22 Years Real Estate Experience


## Piravien Siva
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
**Bus: 416-289-3333**


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Warden/Finch

**Scarborough** $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


### Kennedy / Hwy 401

**Scarborough** $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


### Markham / Sheppard Ave


**Scarborough** $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse


### McCowan / Ellesmere

**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


### Mccowan & Hwy 401

**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

### Kennedy / 401

**Scarborough** $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

### Simcoe St / 401

**Oshawa** $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft

### Grandview Dr. / Bloor

**Oshawa** $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7

**Markham** $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna

**Pickering** $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E

**Ajax** $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

### Markham & Ellesmere


**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol

**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### 401/Morningside

**Scarborough** $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr

**Stouffville** $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park

**Stouffville** $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரவின் ஆக்ரோஷமான உரை!

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு தீர்வு காண்பது இலகு!

### பிரச்சனை கொடுக்கும் வடக்கு தெற்கு அரசியல்வாதிகள் நீக்கப்பட வேண்டும்!





தையிட்டி, திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகு. இந்த பிரச்சினையை மையப்படுத்தியதாக செயற் படும் வடக்கு அரசியல் மற்றும் தெற்கு அரசியல் நீக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் தான் திஸ்ஸ விகாரை பிரச்சனைக்கு தீர்வு காண இடமளிப்பதில்லை. இனவாதம் இவர்களுக்கு தேவை. தொல்பொருள் ஒன்று கிடைத்தால் அது பௌத்தமா அல்லது இந்துவா என்று ஆராய்வது தவறு. இனவாதம் தோற்றம் பெறுவதை தடுக்க கடுமை யான நடவடிக்கைகளை எடுக்க பின்வாங்க போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று 17 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். ஜனாதிபதி அங்கு மேலும் உரையாற்றியதாவது,

யுத்தத்தால் என்ன நேர்ந்தது.? வடக்கு மாகாணம் பாரிய பின்னடைவை எதிர்கொண்டது. இழப்புக்கள் மாத்திரமே மிகுதியாகின. வடக்கிலும், தெற்கிலும் இந்த நிலைமையே காணப்பட்டது. இவ்வாறான நிலை மீண்டும் எமக்கு தேவையா,முரண்பட்டுக் கொள்ள வேண்டிய தேவை கிடை யாது.

எமது தலைமுறை போரிட்டது, முரண்பட்டது. ஆகவே எதிர்கால தலைமுறை போரிடாமலும், முரண்பட்டுக் கொள் ளாமலும் இருக்கும் வகையில் இந்த நாட்டை நாங்கள் கட்டியெழுப்புவோம். இந்த நாட்டில் இனி இனவாதத்துக்கு இடமில்லை. அரசியல்வாதிகளுக்கு தான் இனவாதம் தேவை, மக்களுக்கல்ல, யாழ். திஸ்ஸ விகாரையை மையப் படுத்தியதாக பிரச்சினை காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற பாராளு மன்ற ஆலோசனை சார் கூட்டத்தின்போது 'திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகு, இந்த பிரச்சினையை மையப்படுத்தியதாக செயற்படும் வடக்கு அரசியல் விலக வேண்டும். இந்த பிரச்சினையை அடிப் படையாக கொண்டு தெற்கில் மேற்கொள்ளப்படும் அரசியல் நீக்கப்பட வேண்டும். இவ்வாறான அடிப்படையிலான அரசியல் நிலைமை நீக்கப்பட்டால் திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்' என்று குறிப்பிட்டேன். விகாரையின் விகாராதிபதி, அந்த பகுதியில் வாழும் மக்கள், நாக விகாரையின் விகாராதிபதி ஆகியோர் ஒன்றிணைந்தால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.


அரசியல்வாதிகள் தான் திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண இடமளிப்பதில்லை. இனவாதம் இவர்களுக்கு தேவை. எந்த மாகாணத்தினதும், மக்களினதும் உரிமை களை அரசாங்கம் பறிக்கவில்லை. அவ்வாறு ஒருபோதும் செயற்படபோவதில்லை. இந்த நாட்டில் எவ்விடத்தில் தொல் பொருள் சின்னங்கள், அடையாளங்கள் கிடைக்கப் பெற்றா லும் அவற்றை மதம் மற்றும் இன அடிப்படையில் பார்க்க கூடாது. தொல்பொருளாகவே பார்க்க வேண்டும்.

எங்கேனும் பகுதியில் தொல்பொருள் கிடைக்கப் பெற்றால் முதலில் அது சிங்களமா? தமிழா? பௌத்தமா? அல்லது இந்து மதத்துக்குரியதா என்றே பார்க்கப்படுகிறது. இது தவறு. தொல்பொருள் மரபுரிமை அடிப்படையில் தான் அவற்றை பார்க்க வேண்டும். ஆனால் இனவாதிகள் தொல் பொருள் சின்னங்களை பௌத்தமா அல்லது இந்துவா என்றே பார்க்கிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு இனவாதம் வேண்டும். இனவாதிகளை மக்கள் தோற்கடித்தார்கள். இருப்பினும் அவர்கள் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். எம்மீது நம்பிக்கை கொண்டீர்கள். எந்த கடுமையான நிலையிலும் எம்மீது கொண்ட நம்பிக்கையை பலவீனமடைய செய்ய இடமளிக்க போவதில்லை என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் உதவியவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துங்கள் - ஆயர் பேரவை வேண்டுகோள்!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூ த்திரதாரிகள் மற்றும் அந்த கொடூரமான செயலிற்கு உதவியவர்கள் யார் என்பதை கண்டறிவது அவசரமான விடயம் என இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெரிவித்துள் ளது. உயிர்த்த ஞாயிறு குறித்த தனது விசேட செய்தியில் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை இதனை தெரிவித்து ள்ளது.

2025ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெற்று ஆறு வருடங்களா கின்றது என தெரிவித்துள்ள கத்தோலிக்க ஆயர் பேரவை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சுயாதீனமான, பக்கச் சார்பற்ற விசாரணைகளை உறுதி செய்வதற்காக அரசாங் கம் சில சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.



இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளை நாங்கள் வரவேற் கும் அதேவேளை விசாரணையின் இறுதி நோக்கம் குற்றவாளிகள் யார், அவர்களிற்கு உதவியவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும் என வலியுறுத்துவதாக கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெரிவித்துள்ளது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# இலங்கையின் இறையாண்மையை இந்தியாவிடம்! அநுர அரசு காட்டிக் கொடுத்துள்ளதாக தயான் ஒப்பாரி

ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையின் இறையாண்மையை இந்தியாவிடம் காட்டிக் கொடுத்துள்ளதாக ஐ.நாவுக்கான முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தயான் ஜெயதிலக கூறுகிறார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அனைமையில் இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டிருந்த போது செய்து கொள்ளபட்ட ஒப்பந்தங்கள் குறித்து இணையத்தள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குறித்த உடன்படிக்கைகளில் பல விடயங்கள் இந்தியாவுக்கு இலங்கையின் இறையாண்மையை காட்டிக் கொடுக்கும் வகையிலானவை என்றும், ஆனால் அந்த உடன்படிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இன்னும் எந்த அதிகாரப்பூர்வ அறிக்கையையும் வெளியிடவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவால் செய்துகொள்ள திட்டமிடப்பட்ட மற்றும் ஜேவிபியின் எதிர்ப்பு வெளியிட்ட உடன்படிக்கைகள் இம்முறை செய்து கொல்லப்பட்டவற்றில் உள்ளன என்றும், இவற்றால் இலங்கையின் இறையாண்மை கடுமையாக சவாலுக்கு உட்படுத்தபடுள்ளது தயான் ஜெயதிலக கூறுயுள்ளார்.

இதேவேளை இந்தியப் பிரதமரின் தலைமையில் செயல்படுத்தப்படும் அகண்ட பாரத் திட்டத்தில் இலங்கையும் இணைந்துள்ளதாகவும், குறித்த உடன்படிக்கைகள் மூலம், நாட்டில் இந்திய கனரக ஆயுதத் தொழிற்சாலைகள், களஞ்சியங்கள் மற்றும் இராணுவ வீரர்களை நிறுவுவதற்கான திட்டங்கள் உள்ளன என்றும் அவர் இந்த நேர்காணலில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை டெல்லிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு இந்திய பிரதமர் நரேந்திரமோடி அழைப்பு விடுத்துள்ளார். கடந்த வார இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி, கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து இரு தரப்பு கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார். இதன் போதே டெல்லி விஜயத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானும் கருணாவும் ஸ்ரீலங்காவின் தேச பக்தர்கள்! சிறையில் பிள்ளையானைச் சந்தித்த உதயகம்மன்பில தெரிவிப்பு!





பிள்ளையான் என்னிடம் கண்ணீர் பெருக்கெடுத்து பேசினார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பிள்ளையான் என்கின்ற சிவநேசதுரை சந்திரகாந்தனை சந்தித்தது குறித்து பிவித்துரு ஹெல உறுமய கட்சி தலைமையகத்தில் 16 ஏப்ரல் 2025 ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று நான் நடத்தும் செய்தியாளர் சந்திப்பு என் வாழ்நாளில் நான் ஒரு போதும் எதிர்பார்க்காத ஒன்று. நான் பிள்ளையானை ஒரு அரசியல்வாதியாக சந்திக்கவில்லை. ஒரு சட்டத்தரணியாகவே சந்தித்தேன். நான் எனது அரசியல் வாழ்க்கையையும் தொழில் வாழ்க்கையையும் தனித்தனியாக வைத்திருக்கிறேன். அதனால் தான் நான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் செல்வதற்கு முன்பும் சரி, பின்பும் சரி, அதைப் பற்றி ஊடகங்களுக்குச் சொல்லவில்லை.

நான் பிள்ளையானைச் சந்தித்ததை ஊடகங்களுக்குச் சொல்ல வேண்டாம் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள நிர்வாக அதிகாரி என்னிடம் கேட்டுக் கொண்டார். அப்போதும் எனக்கு சட்டத்தரணிகளின் நெறிமுறைகள் தெரியும் என்று அவர்களிடம் கூறினேன்.

ஆனால் அடுத்து நடந்தது தான் வரலாற்றில் இதற்கு முன் கண்டிராத வகையில் காவல்துறை அரசியல் மயமாக்கப்பட்டதற்கு சிறந்த உதாரணம் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த அரசாங்கத்தின் தலைவர்கள், நாட்டின் சட்டத்தை அப்பட்டமாக மீறி, முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அல்லது பிள்ளையானை கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்படும் போது, கைது செய்யப்பட்டமைக்கான காரணத்தைக் கூறும் ஆவணம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதைச் செய்யவில்லை.

மேலும், ஒரு சட்டத்தரணி தன்னுடன் இந்த விடயத்தைப் பற்றி விவாதிக்க வாய்ப்பு கோரினால், அவருக்கு அது வழங்கப்பட வேண்டும். அதுவும் நிராகரிக்கப்பட்டது. மேலும், அவர்களது குடும்பத்தினருடனும் உறவினர்களுடனும் பேச அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

எவ்வாறாயினும், பிள்ளையானின் சட்டத்தரணியாக அவரை நான் 30 நிமிடங்கள் சந்தித்துப் பேசியிருந்தேன். பிள்ளையான் என்னிடம் கண்ணீர் பெருக்கெடுத்து பேசினார். நான் புலிகளிடமிருந்து பிரிந்து என் உயிரைப் பணயம் வைத்து புலிகளைத் தோற்கடித்தேன். அப்போது புலிகள் பக்கம் போராடிய சிலர் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். சிலர் வெற்றிகரமான தொழிலதிபர்கள்.

சிலர் அரசு சாரா நிறுவனத் தலைவர்கள். அவர்கள் சமூகத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வாழ்கிறார்கள். பொய்யான வழக்கின் கீழ் ஐந்து ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டேன். இறுதியாக, ஆதாரங்கள் இல்லாததால் வழக்கு கைவிடப்பட்டது.

இப்போது நான் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். நாட்டைக் காப்பாற்ற நான் உதவியிருந்தாலும், என்னை இப்படித் தான் நடத்துகிறார்கள். என அவர் அழுது கொண்டே கூறினார்.

சமூக ஊடகங்களில் எழுதும் சிலருக்கு பிள்ளையான் யார் என்று தெரியாது. இந்த நாட்டில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் அவர் ஆற்றிய தீர்க்கமான பங்கிற்காக அவர் ஒரு தேசிய வீரராகக் கருதப்பட வேண்டும்.

கருணாவும், பிள்ளையானும் விடுதலைப் புலிகளை விட்டு வெளியேறி இராணுவத்தில் சேர்ந்த பின்னர் தான் விடுதலைப் புலிகளின் முடிவு தொடங்கியது. பிள்ளையான் என்பவர் 14 வயதில் (5ம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களையும் எங்களையும் பிரிக்க முடியாது! வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பெருமிதம்!

வடக்கு தமிழ்க் கட்சியினர் எம்மை விமர்சிப்பதால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. இந்த விமர்சனங்களால் எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களைத் தமது பக்கம் மீண்டும் இழுக்க தமிழ்க் கட்சியினரால் முடியாது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளார்கள். இந்நிலையில் அந்த மக்கள், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமது கட்சிக்கு ஆதரவு வழங்குவதைத் தடுக்கும் வகையில் வடக்கு தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் என்று சொல்லப்படுபவர்கள், நான் உள்ளிட்ட எமது கட்சியின் உறுப்பினர்களைத் தற்போது விமர்சித்து வருகின்றார்கள். இந்த விமர்சனங்களால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களை தமது பக்கம் மீண்டும் இழுக்க அவர்களால் முடியாது.




ஏனெனில் வடக்கு தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள். இந்த மக்களின் அரசியல், பொருளாதார ரீதியிலான கோரிக்கைகளை நாம் நிறைவேற்றுவோம். எம்மை நம்பி வரும் மக்கள் எவரையும் நாம் கைவிடமாட்டோம் என கூறியுள்ளார்.

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந் தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டு மன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடை யோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப் பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப் பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெரு க்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்க மும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப் பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்க லாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டு களாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடிய வில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ் வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# இந்து மதம் குறித்து அவதூறு பேசினால் தண்டனை!
## முதன் முதலாக அமெரிக்காவில் இயற்றப்படும் புதிய சட்டம்

இந்து மதம் மற்றும் இந்துக்கள் குறித்து அவ தூறு பேசினாலோ வேறு சூழலை கெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டாலோ கடும் தண்டனை விதிக்கும் சட்ட மசோதா அமெரிக்காவில் முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 25 லட்சத்திற்கும் மேலான இந்துக்கள் வசித்து வருகின்றனர். பல்வேறு முக்கிய பொறுப்புகளில் உள்ளனர்.



அமெரிக்காவின் முக்கிய மாகாணங்களில் ஒன்று ஜார்ஜியா. இங்கு 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்து மக்கள் வசித்து வருகின்றனர். இம் மாகாணத்தில் குடியரசு கட்சி சார்பில் சுவாண்ட் டில், கிளிண்ட் டிக்சன், ஜனநாயக கட்சியை சேர்ந்த ஜேசன் எஸ்டீவ்ஸ், இம்மானுவேல் ஜோன்ஸ் ஆகியோர் இணைந்து இந்த மசோ தாவை செனட் சபையில் அறிமுகம் செய்தனர்.

உலகில் 100 கோடிக்கும் மேலானவர்கள் பின்பற் றும் இந்து மதம் என்றும், இது உலகில் பழமை யான மதங்களில் ஒன்று என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த மசோதா, மதம், இனம், நிறம், அயல் நாட்டவர் என்ற வேறுபாட்டைத் தடைசெய்யும் சட்டங்களின் கீழ் வரும்.

தொடர்ந்து சட்டம் நிறைவேற்றப்பட்டதும் விரைவில் அமலுக்கு வரும். இதனை தொடர் ந்து இந்து மதம் இந்துக்கள் மீதான வெறுப்பு செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்ட ரீதியிலான கடும் நடவடிக்கைள் பாயும். தண்டனை குறித்த விவரம் ஏதும் வெளியாகவில்லை.

இந்துக்களுக்கு ஆதரவாக அமெரிக்காவில் ஒரு புது சட்டம் இயற்றப்படுவது இதுவே முதன் முறையாகும். இந்த பெருமையை ஜார்ஜியா பெறுகிறது. இதனை இந்து அமைப்பினர் வரவேற்றுள்ளனர்.

# அன்னை பூபதியின் நினைவேந்தலுக்கு நோர்வேயில் இருந்து பணம் பெற்றுள்ள 3 பேருக்கு எதிராக மகள் பொலிஸில் முறைப்பாடு






மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தலை வைத்து வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்று அதனை ஒரு அரசியலாக்கி நினைவேந்தலைச் செய்யவுள்ள தாகவும் அதனை தடைசெய்யுமாறும் கோரி 3 பேருக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் 15 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இது பற்றி தெரியவருவதாவது

தியாக தீபம் அன்னை பூ பதியின் 37 ஆவது நினை வேந்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி அவரது சமாதி யில் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் குறித்த நினைவேந்தலை முன்னிட்டு மனித நேய செயற் பாட்டாளர்களான 3 பேர் நோர்வே நாட்டிலிருந்து தனது தாயாரின் பெயரைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்று விளையாட்டு போட்டிகள் மற்றும் அன்னை யின் திருவுருவப் படத்தை வாகனத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்கு திட்டமிட்டுள்ள னர்.

அமைதியாகச் செய்ய வேண்டிய இந்த நினை வேந்தலை இந்த மூவரும் அரசியலாக்கி இலாப மடையவுள்ளனர். இவ்வாறு செய்வதை நான் விரும்பவில்லை. ஆகவே இந்த 3 பேரின் செயற் பாட்டைத் தடுத்து நிறுத்தி இவர்களைத் தடை செய்து அமைதியாக நினைவேந்தலைச் செய்வதற் கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருமாறு குறிப் பிட்டு அவர்களுக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்?

உள்ளூராட்சி மன்றங்களை அதிகமாகக் கைப்பற்ற வேண்டும் மக்கள் தங்களுடன் தான் இருக்கின்ற னர் என்பதைக் காண்பிக்க வேண்டும் என்னும் அவாவில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் என்போர் ஏட்டிக்குப் போட்டியாக பேசி வருகின்ற னர். இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்னும் பழைய கதையைக் கூறுகிறார்.

மறுபுறம் கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ அவரு க்கே உரித்தான பாணியில், தமிழ் அரசு கட்சி அதே போல் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யினர் ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களை முடக்கு பவர்கள் என்னும் கதையை கூறுவதன் மூலம் தனது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்த முயற்சி க்கிறார். இன்னொருபுறம், தங்களுடைய கடந்தகால ஏக்கிய ராஜ்ய கதைக்கு சுமந்திரன் விளக்கமளித் துக் கொண்டிருக்கிறார். ஆனால், அரசியல் வெள்ளமோ கழுத்தையும் தாண்டி விட்டது.

இப்படியே தொடர்ந்தால் சில வருடங்களில் மூச்சு விடுவதே முடியாமல் போகலாம். இன்றைய அரசி யல் சூழல் எவ்வாறான நிலைமையில் இருக் கிறது? இதில் தமிழ் மக்களின் வாழ்நிலை என்ன நிலையில் இருக்கிறது? இதனை சரிசெய்யக்கூடிய ஆற்றலோடு நாம் இருக்கிறோமா? இவைகளைப் புரிந்து கொள்ளாமல் ஒவ்வொருவரும் பழைய கதைகளைக் கூறித் தங்களைத் தாங்களே திருப்திப் படுத்திக் கொள்ள முற்படுகின்றனர்.

இதுவரை தமிழர் பிரச்னையில் ஆர்வம் காட்டி வந்த இந்தியாவின் அணுகுமுறைகள் அப்படியே தொடருமா என்னும் கேள்வி எழுந்திருக்கிறது. இது மிகவும் சிக்கலானது. ஏனெனில், இந்தியாவின் ஈடுபாடு இந்த விடயத்தில் இல்லை என்றால் தென்னிலங்கை முற்றிலுமாக தமிழர் பிரச்னையை கைகழுவி விடுவது இலகுவாகி விடும். இந்த நிலையில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் முதலில் தங்களை நிறுத்துப் பார்த்து அதற்கேற்ப கருத்துகளை முன்வைக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முயற்சிப்பதில் தவறில்லை. ஆனால், நடைமுறை க்கு உதவாத வாதங்களை முன்வைப்பதும் பழைய கதைகளைக் கூறி, மக்கள் மத்தியில் மீண்டும் பொய்களை விதைக்க முற்படுவதும் மேலும், தமிழ் மக்களை அரசியல் ரீதியில் பலவீனப்படுத்தவே வழிவகுக்கும். சாத்தியப்பட முடியாத விடயங்களை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் தொடர்ந்தும் உச்சரித்துக் கொண்டிருப்பதும் சாத்தியமான விடயங்களை முன்வைத்து அரசியலை முன்னெடுக்க முயற்சிக் காமையும்தான் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியம் பேசுவோரிலிருந்து விலகிச் செல்வதற்கான கார ணம்.

ஆனால், தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் இப்போதும் கூட தங்களுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருப்பது தான் கொடுமையானது. தமிழர் அரசியலில் ஏற்கனவே தூய்மை வாதம் அவமானகரமான தோல்வியை சந்தித்து விட்டது. அரசியலில் தூய்மை வாதங் களை முன் வைத்துக் கொண்டிருப்போர் இறுதி யில் தாங்கள் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொள்ளும் மக்களுக்கு எதிராகவே சிந்திக்கின்றனர் செயல்படுகின்றனர். எனவே, இனியும் வெறும் வார்தைஜால அரசியலை முன் வைப்பதை விடுத்து சாத்தியங்கள் தொடர்பில் சிந்தியுங்கள்.

# பிள்ளையானும் கருணாவும்..

(4ம் பக்கத் தொடர்ச்சி) விடுதலைப் புலிகளினால் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்ட ஒரு சிறுவர் போராளி. விடுதலைப் புலிகள் சிறுவர் போராளிகளை சேர்த்ததற்கு பிள்ளையான் ஒரு வாழும் சான்றாக உள்ளார்.

பிள்ளையானைப் போலவே கிழக்குப் புலித் தலைவர் கருணா அம்மானும் நமது இராணுவத்திற்கு தலை வலியாக மாறிய திறமையான போராளி.

கருணாவும் பிள்ளையானும் 2003 ஆம் ஆண்டு ஆறாயிரம் பயங்கரவாதிகளுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை விட்டு வெளியேறினர்.

விடுதலைப் புலிகளைக் கைவிட்டு, பிரிவினை வாதத் திற்கும் பயங்கரவாதத்திற்கும் எதிராக தனது உயி ரைப் பணயம் வைத்து நமது இராணுவத்துடன் இணைந்து நாட்டிற்காகப் போராடிய உண்மையான தேசபக்தர் என்று கம்பன்பில கூறியுள்ளார்.

# பிள்ளையானுடன் பேசுவதற்கு ரணிலுக்கு அனுமதி மறுப்பு! உதயகம்மன்பிலவுக்கு அனுமதி! பாதுகாப்பு அமைச்சு தகவல்!

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் என்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனுடன் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளததாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள சிவநேசத் தொலைபேசி மூலம் உரையாட அனுமதிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 09 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் குறித்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை, தடுப்பு காவலில் உள்ள சந்தேகநபருடன் தொலைபேசியில் உரையாடுவது சட்டவிரோதமானது. இதேவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனை சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிவநேசத்துரை சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக உதய கம்மன்பில செயற்பட்டதால் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட பிள்ளையான் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிள்ளையானை சந்திக்கக கம்மன்பிலவிற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அனுமதியானது, பிள்ளையானின் சட்டத்தரணியாக கம்மன்பில செயற்படுவதால் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

# யாழ்.திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை யாழ்.மாநகர சபை பொறுப்பேற்க வேண்டும்



இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்டப்பட்டு இந்திய அரசாங்கத்தால் பராமரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ்ப்பாணம் மாநகர சபை, எதிர்காலத்தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 15 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தின் பராமரிப்புக்குரிய பொறுப்பை இந்திய அரசாங்கம் 5 ஆண்டுகளுக்கு ஏற்றிருந்த நிலையில் அதில் 4 ஆண்டுகள் வரையில் நிறைவு பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை அதனைக் கொண்டு நடத்துவதற்குரிய ஒழுங்குகளை முன்னெடுப்பதற்காகவும் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

எவ்வளவு விரைவாக இதனை மாநகர சபையே பொறுப்பேற்று இயக்க முடியுமோ அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார். அது தொடர்பில் இந்தியத் துணைத்தூதுவர் கருத்து வெளியிடுகையில்,

இந்தக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்கான இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டம் 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் நடத்தப்படவில்லை என்றும் அது எவ்வளவு விரைவாக இடம் பெறுகின்றதோ, அதற்கு அமைவாகவே ஏனைய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இணை முகாமைத்துவக் குழுவை உள்ளூராரை மையப்படுத்தியதாக உருவாக்குவது சிறப்பாக இருக்கும் என்றும், அத்துடன் இந்தியத் தூதரகம் ஆலோசனை வழங்கும் ஒரு தரப்பாகவே எதிர்காலத்தில் இருக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் கலாசார மண்டபத்தின் ஒவ்வொரு மாடிக் கட்டடத் தொகுதிக்குமான பல்வேறு விதமான முன்மொழிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இது சாதகமானதொரு நிலைமை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது இந்தியத் தூதரக அதிகாரிகளே பராமரித்து வரும் நிலையில் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக யாழ். மாநகர சபையால் அதிகாரிகளை நியமிக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

மேலும் இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தை விரைவாக கூட்டுவதற்கு ஏதுவாக மத்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சுக்கு உடனடியாகக் கடிதம் அனுப்புமாறும் ஆளுநர் பணித்தார்.

கலாசார மண்டபம் யாழ். மாநகர சபையால் முழுமையாக இயக்கப்பட்ட பின்னர் அதில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பான திட்டமிடல்களை முன்னெடுக்கலாம் என இந்தியத் தூதரக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.


# டக்ளஸ் கைதாவார்? சுமந்திரனின் கணிப்பு!

யாழில் மகேஸ்வரி நிதியத்தின் ஊழல் தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பிலான விசாரணைகளை அடுத்து யாழில் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைதாவதற்கு வாய்ப்புள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் முன்னாள் அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கைதாகி மூன்று மாதங்களிற்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். எனினும் பிள்ளையான் தனது முன்னைய எஜமான்களை சிக்க வைக்கும் வாக்கு மூலங்களை வழங்கியுள்ளதாக அனுர அரசு ஆதரவு ஊடகங்கள் பரபரப்பினை வெளிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் யாழில் மகேஸ்வரி நிதியத்தின் ஊழல் தொடர்பில் முன்னாள் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கைதாகலாமென்ற ஊகத்தை எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

1996ம் ஆண்டு முதல் வடமராட்சி கிழக்கின் கரையோர கிராமங்களை இலக்கு வைத்து பாரிய மணல் கொள்ளை மகேஸ்வரி நிதியத்தின் பேரில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.



பாரிய மணல் மோசடியில் மாறி மாறி ஆட்சிக் கதிரையிலிருந்த டக்ளஸ் தேவானந்தா பின்னணியில் இருந்திருந்தார். இந்நிலையில் நல்லாட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு துறைக்கு அனுர திசநாயக்க நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போது அவர் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்துள்ள நிலையில் மகேஸ்வரி நிதியத்தின் ஊழல் தொடர்பில் முன்னாள் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கைதாகலாமென்ற ஊகத்தை எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய மக்கள் சக்தியினர் யாழ்ப்பாணத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அமைச்சர் ஒருவர் சண்டித்தனத்திலும் ஈடுபட்டுள்ளார் எனவும் சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

# எல்லையின் பேய்கள்:- பிள்ளையானின் வன்முறை மரபையும் அரசியலையும் அம்பலப்படுத்துதல்!

இலங்கையில் காணப்படும் போருக்கு பிந்திய நீண்ட மற்றும் வேதனையான சூழ்நிலையை கருத்தில் கொண்டு தீர்க்கப்படாத படுகொலைகள் மற்றும் மறக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களின் ஆவிகள் நமது தேசிய மனச்சாட்சியின் நிழலாக தொடர்கின்றன.

அவ்வாறான இரண்டு சம்பவங்கள் -வெலிக்கந்தை படுகொலை(மே 2006) கெப்பிட்டிகொலாவ கிளைமோர் தாக்குதல் (ஜீன் 2006) சிங்கள மக்களின் உணர்வுகளை மிக மோசமாக பாதித்தன.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் இந்த இரண்டு அட்டூழியங்களிற்கு எதிராகவும் உடனடியாக அரசியல் கண்டன பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இரு சம்பவங்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் யுத்த தந்திரோபாயத்தை வலுப்படுத்துவதற்கு உதவின.

ஆனால் இரண்டு தசாப்தங்களின் பின்னர் புதிய தாக்குதல்கள் புதிய கேள்விகளை எழுப்புகின்றன. நீருக்கு அடியில் அழுத்தப்பட்ட பந்து மேலே வரமுயல்வது போல புதிய கேள்விகள் மேலே வரத்துடிக்கின்றன.

உண்மையிலே இந்த கொலைகளிற்கு யார் தலைமை தாங்கினார்கள்? போருக்கு பிந்தைய அரசியல் கட்டமைப்பில் உண்மையான குற்றவாளிகளிற்கு தண்டனை கிடைக்கவில்லையா? பாதுகாப்பு கிடைத்ததா? ரப்பர் பந்து போன்று மீண்டும் மீண்டும் தோன்றும் ஒருபெயர் சந்திரகாந்தன்-சிவனேசதுரை பிள்ளையான்

வெலிக்கந்தை பொலனறுவையில் காட்டுபகுதியில் அரசநிதியுடன் கால்வாய் ஒன்றினை அமைத்துக் கொண்டிருந்த 13 சிங்கள விவசாயிகள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

அவர்கள் உடல்கள் மீட்கப்பட்ட வேளை நானும் அங்கிருந்தேன்.13 பேரினதும் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. கழுத்தை ஒரு கூர்மையான ஆயுதத்தால் வெட்டியிருந்தனர்.

மகிந்த ராஜபக்ச அரசாங்கம் இலகுவாக விடுதலைப்புலிகள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தியது. விடுதலைப்புலிகளின் ஊடக பேச்சாளர் தயா மாஸ்டர் தமிழ்நெட் ஊடாக இதனை நிராகரித்தார். இந்த சம்பவம் இடம்பெற்று இரண்டு வாரங்கள் கடந்த நிலையில் 15ம் திகதி பொதுமக்கள் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து கிளைமோரில் சிக்கியது. சிறுவர்கள் உட்பட 60 பேர் கொல்லப்பட்டனர்.



இந்த இரண்டு தாக்குதல்களும் எல்லை பகுதியில் இடம் பெற்றன. இந்த சம்பவங்கள் இடம் பெற்ற பகுதி விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் காணப்பட்ட பகுதிகளிற்கு அருகில் மாத்திரம் இருக்கவில்லை.இந்த சம்பவம் இடம்பெற்ற பகுதிகள் இலங்கை இராணுவம் மற்றும் தமிழ் துணைப்படையினரின் கோட்டைக்கு அருகிலும் காணப்பட்டன.

இந்த தாக்குதலிற்கும் விடுதலைப் புலிகளே காரணம் என ராஜபக்ச அரசாங்கம் குற்றம் சாட்டியது. விடுதலைப்புலிகள் வழமைக்கு மாறான ஒரு விதத்தில் இதனை நிராகரித்தனர்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். ஆனால் இந்த இரண்டு சம்பவங்களையும் விடுதலைப்புலிகள் செய்தார்கள் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை.

இந்த தாக்குதல்களை ஆழமாக ஆராய்ந்தால்.அந்த நேரத்தில் அந்த பகுதிகளை யார் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்கள் என்பது மிக முக்கியமான விடயமாக காணப்படும்.

2006ம் ஆண்டளவில் கருணா அம்மானின் தலைமைத்துவத்தின் கீழ் அரசியல் இராணுவசீதியில் பிள்ளையான் உருவாக்கிய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு இராணுவ புலனாய்வு பிரிவுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்திருந்தது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு கிழக்கில் அரசாங்கத்திற்கு ஆதரவான அமைப்பாக. விடுதலைப்புலிகளிற்கு எதிராக செயற்பட தொடங்கியிருந்தது.

உள்ளூர் செய்தியாளர்கள் (நானும்) அவர்கள் அந்த பகுதியில் நடமாடுவதை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தோம். அந்த பகுதியில் இலங்கை இராணுவத்தினதும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளினதும் ரோந்து நடவடிக்கைகளை அவதானிக்க முடிந்தது.

அவ்வாறான பின்னணியில் தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் அனுமதியின்றி அல்லது அந்த அமைப்பை இயக்குபவர்களின் ஆதரவின்றி அல்லது மௌனமான சம்மதம் இன்றி விடுதலைப்புலிகள் அவ்வாறான ஒருங்கிணைந்த தாக்குதல்களை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்பட்டன.ஆகவே தற்போது காணப்படும் முக்கிய கேள்வி?

யுத்த நிறுத்தத்திலிருந்து முழுமையான யுத்தத்தை நோக்கி செல்வதை நியாயப்படுத்துவதற்காக இந்த படுகொலைகளை பயன்படுத்தினார்களா? இதன் மூலம் யாருக்கு நன்மை?

யார் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதை மாத்திரம் கருத்தில்கொள்ளாமல் இந்த படுகொலைகளின் பின்னர் உருவான சூ ழ்நிலையால் யார் நன்மையடைந்திருப்பார்கள் என சிந்திப்பதும் அவசியம்.

மகிந்த ராஜபக்சவை பொறுத்தவரை இந்த தாக்குதல்கள் தேசிய உணர்வை தீவிரப்படுத்துவதற்கு உதவின.அதேபோன்று இராணுவ நடவடிக்கையொன்றை நியாயப்படுத்துவதற்கு உதவின.

பிள்ளையானிற்கும் அவரது அமைப்பிற்கும தாங்கள் அரசாங்கத்தின் உறுதியான விசுவாசிகள் என்ற(22ம் பக்கம் பார்க்க)

# கனடாவில் பாலியல் வன்கொடுமைக் குற்றத்தில் இந்து மத போதகர் கைது!

கனடாவில் பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையை பூர்வீகமாக கொண்ட 44 வயதான இந்து மதப்பிரசாரகர் மீதே யோர்க் பிராந்திய பொலிஸார் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர். சந்தேக நபர் மீது 7 பாலியல் சீண்டல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான பாலியல் தாக்குதல்களில் ஒன்ராறியோ மத ஆசிரியர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவிக்கின்றனர்.

44 வயதான அந்த நபர் ஒன்ராறியோவின் பிக்கரிங்கில் உள்ள ஒரு குடியிருப்பு இடத்தில் மத வகுப்புகளை கற்பித்ததாக யார்க் பிராந்திய போலீசார் கூறுகின்றனர்.

பிக்கரிங் மற்றும் ஒன்ராறியோவின் மார்க்காமில் நடந்த ஆன்மீக ஆய்வு அமர்வுகளின் போது அவர் ஒரு பாதிக்கப்பட்டவரை ஆறு முறை தாக்கியதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாலியல் தாக்குதல்கள் ஜனவரி 2021 முதல் கடந்த அக்டோபர் வரை நடந்ததாக புலனாய்வாளர்கள் கூறுகின்றனர். விசாரணையின் போது, டிசம்பரில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான இரண்டாவது பாதிக்கப்பட்டவரைப் பற்றி அறிந்ததாக போலீசார் கூறுகின்றனர்.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என்று அவர்கள் நம்புவதாகவும், தகவல் தெரிந்த எவரும் முன்வருமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

# தமிழ்மக்களிடம் வாக்களிக்கக் கோருவது?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் தங்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தாங்கள் மட்டுமே சரியானவர்கள் தங்களுக்கு மட்டுமே வாக்களியுங்கள் என்று கோருவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

தேர்தல் அரசியலில் ஒவ்வொருவரும் தங்களை நியாயப்படுத்துவதும் மற்றவர்களை நிராகரியுங்கள் என்று கூறுவதும் வழமையான அரசியல் சங்கதிகள் தான். ஆனால், நடைபெறவுள்ள தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சி அனைத்து வட்டாரங்களையும் வென்றாலும் கூட, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்ற முடியாது.

இலங்கை தமிழ் அரசு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கின்ற போது கூட உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற இடங்கள் சிலவற்றை காலப் போக்கில் பாதுகாக்க முடியாத நிலைமையே ஏற்பட்டது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இப்போது நிலைமை முன்னரையும் விடவும் மோசமாக இருக்கின்றது. தற்போதைய சூழலில் தமிழ்த் தேசிய கட்சிகள் பல அணிகளாக போட்டியிடுகின்றன. ஒவ்வோர் அணியும் தாங்கள் மட்டுமே சரியானவர்கள் என்றும் கூற முற்படுகின்றனர். இதேவேளை, இம்முறை புதியதொரு சவாலையும் தமிழ் கட்சிகள் எதிர் கொண்டிருக்கின்றன. அதாவது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சவால்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விடாதீர்கள். அவ்வாறு வாக்களித்தால் அவர்கள் தமிழ்த் தேசிய இனப்பிரச்னை என்று ஒன்றில்லை என்று பிரசாரம் செய்வார்கள். அதனை நாம் தோற்கடிக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதான கோஷமாக இருக்கிறது. இவ்வாறான நிலைமை முன்னைய தேர்தல்களின் போது இருந்ததில்லை. ஒரு கட்சி மக்களுக்கு நெருக்கமாக இருந்து பணியாற்றினால் மக்களிடம் அதிகம் கூற வேண்டியதில்லை.

நிலைமைகளை புரிந்து கொண்டு, தங்களின் கடமையை உணர்ந்து மக்களே வாக்களிப்பார்கள். மக்களிடம் கெஞ்சும் நிலைமை ஏன் ஏற்படுகிறது என்றால் கட்சிகள் முறையாக மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பது தான் அதன் பொருள்.

இலங்கை தமிழ் அரசு கட்சியை பொறுத்த வரையில் மக்கள் பழக்க தோசத்தில் தங்களுடைய சின்னத்துக்குத் தான் வாக்களிப்பார்கள் என்னும் நம்பிக்கை மட்டுமே, அரசியல் முதலீடாகக் கொண்டிருக்கிறது. இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு மக்கள் வாக்களிப்பதே ஆச்சரியமானது.

ஏனெனில் கடந்த 75 வருடங்களாக அந்தக் கட்சி கூறிய விடயங்களில் எதனையுமே அடைய முடியவில்லை. ஒரு தோல்வியடைந்த கட்சியாகவே தமிழ் அரசு கட்சி ஒவ்வொரு தேர்தலையும் எதிர் கொள்கிறது. எனினும், பழக்கப்பட்ட கட்சி, தெரிந்த சின்னம் என்னும் நிலையில் கணிசமான மக்கள் வாக்களிக்கின்றனர் குறிப்பாக பழைய தலைமுறையை சேர்ந்தவர்கள் பிறிதொரு தெரிவை நோக்கிச் செல்ல விரும்பாத காரணத்தால், தமிழ் அரசு கட்சிக்கே வாக்களிக்கின்றனர்.

இதன் காரணமாகவே தங்களை ஒரு பிரதான கட்சியென்று கூறிக் கொள்ளும் தகுதியை தமிழ் அரசு கட்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளும் தாங்கள் முன் வைத்த விடயங்களில் எதனையும் வெற்றி கொள்ளவில்லை. வெறுமனே அறிக்கைகளை வெளியிடுபவர்களாகவே இருக்கின்றனர்.

உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களில் தமிழ் கட்சிகள் முன் வைக்கும் எந்தவொரு விடயத்தையும் இந்தக் கட்சிகளால் சாத்தியப்படுத்த முடியாது. அதற்கான வல்லமையும் எந்தவொரு தமிழ் கட்சியிடமும் இல்லை என்பதே உண்மையாகும். எனினும், தமிழ் மக்கள் அவர்களுடைய பொறுப்பை உணர்ந்து வாக்களிக்க வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

# தமிழர்கள் தமக்கே ஆணை வழங்கியதாகக் கூறும் அரசின் செய்தியைப் பொய்யாக்க வேண்டும் - சுமந்திரன்

பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் தமக்கே ஆணை வழங்கியதாக தேசிய மக்கள் சக்தியினால் கூறப்பட்டு வரும் நிலையில் அதனைப் பொய்யாக்கும் வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும். அதன்படி உதிரிக்கட்சிகளுக்கு வாக்களிப்பதை விடுத்து, சமஷ்டியை நீண்ட காலமாக வலியுறுத்தி வரும் பிரதான தமிழ்த்தேசிய கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.



இதுபற்றி 14 ஏப்ரல் 2025 திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது:

இம்முறை புத்தாண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் பிறந்திருக்கிறது. இப்புத்தாண்டில் எமது மக்கள் புதியதொரு அணுகுமுறையில் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். கடந்த பாராளுமன்றத்தேர்தலில் தமிழ் பிரதேசங்களில், அதிலும் குறிப்பாக தமிழ்மக்களின் தேசிய கலாசார பாரம்பரிய உறைவிடமாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்று சிலர் கூறுகிறார்கள்.

தேசிய மக்கள் சக்திக்கு 25 சதவீதமான வாக்குகளே கிடைத்திருக்கின்றன. ஆனால் ஏனைய அனைத்துத் தரப்புக்களுக்கும் தனித்தனியாகப் பார்க்கும் போது அதனைவிடக் குறைந்தளவிலான வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தேசிய மக்கள் சக்திக்கு அடுத்ததாக இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு 20 சதவீத வாக்குகள் கிடைத்திருக்கின்றன. அதே போன்று ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களை விட 10 சதவீதம் குறைவானவர்களே பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள். இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி, தமிழ்மக்கள் தமிழ்க்கட்சிகளைப் புறந்தள்ளி, தமக்குத் தான் ஆணை வழங்கியிருக்கிறார்கள் எனத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூற முற்படுகின்றது. இதுவொரு தவறான பிம்பம்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதற்கு அடுத்ததாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இத்தேர்தல் தமிழ் மாவட்டங்கள் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியில் நடைபெறவிருப்பதனால், இத் தேர்தல் முடிவானது அரசாங்கம் தற்போது கூறிவருகின்ற விடயம் உண்மையா இல்லையா என்பதை சோதித்துப் பார்ப்பதற்கு உகந்ததாக அமையும். ஆகையினாலேயே நாம் எமது மக்களிடம் தெளிவானதொரு ஆணையை வழங்குமாறு கேட்கின்றோம்.

உண்மையில் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் தென்னிலங்கை சிங்கள தேசிய கட்சிகளுக்கு ஆணை வழங்கவில்லை. மாறாக அவர்கள் கூடுதலான வாக்குகளைப் பெற்றதை வைத்து அவ்வாறானதொரு பிம்பம் காண்பிக்கப்படுவதனால் இம்முறை தமிழ் மக்கள் அவ்வாறு வாக்களிக்காமல், தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும். அதேவேளை தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களிக்கும் போது பிரிந்து பிரிந்து ஒவ்வொரு தமிழ்க்கட்சிக்கு வாக்களித்தாலும், அதன் முடிவு பாராளுமன்றத் தேர்தல் முடிவை ஒத்ததாகவே இருக்கும். எனவே தமிழர்கள் குறித்தவொரு தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். அதனூடாகவே தமிழ்மக்களின் ஆணை தமிழரசுக்கட்சிக்கு அல்லது ஒரு தமிழ்க்கட்சிக்கு இருக்கிறது என்ற விடயம் புலப்படும்.

அதன்படி தமிழரசுக்கட்சியே இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறை நிறுவப்பட வேண்டும் என்ற கட்சியின் கொள்கையை சுமார் 75 வருடகாலமாகத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. எனவே அரசியல் தீர்வானது சமஷ்டி முறைமையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்ற தமிழரசுக் கட்சிக்கே தமிழர்கள் ஆதரவளிக்க வேண்டும்.

அடிப்படையில் சமஷ்டிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர்களும், இதுவரை காலமும் அது பற்றிப் பேசாதவர்களும் இப்போது தேர்தலுக்காக அதனை வலியுறுத்தி வருகின்றார்கள்.

அடுத்ததாக உதிரிக்கட்சிகளுக்கு வாக்களிப்பதால் எவ்வித பயனுமில்லை. ஆகவே பிரதான தமிழ்த்தேசிய கட்சியான தமிழரசுக்கட்சிக்குத் தமிழர்கள் வாக்களிக்க வேண்டும். சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழரசுக் கட்சி ஆட்சி செய்வதற்கான ஆணையை மக்கள் வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

### கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# வடக்கு கிழக்கு தமிழர்களை மையப்படுத்திய மூலோபாயத்தை இந்தியா கை விட்டுள்ளது

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைக்கான விஜயத்தின் போது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு அதிகாரப்பகிர்வு சம்பந்தமாகவோ ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாகவோ உத்தியோகபூர்வமாக எந்தச் சந்தர்ப்பத்திலும் கவனம் செலுத்தப்படவில்லை.

இந்த நிலைமையானது வட, கிழக்கு தமிழர்களை மையப்படுத்திய மூலோபாயத்தினை இந்தியா கைவிட்டுள்ளது என்பதற்கான மிகப்பெரிய சமிக்ஞையாக வுள்ளது என்று இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி. தயான் ஜயத்திலக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் தமிழ்த் தலைவர்கள் பல தருணங்களில் இந்தியாவின் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றாது பல்வேறு சந்தர்ப்பங்களை கைவிட்டு வரலாற்றுத் தவறிழைத்ததன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கடுமையாகச் சாடியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான விஜயம் சம்பந்தமாகவும் தமிழ்த் தலைமைகளின் சந்திப்புத் தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் வருகைக்கும் 2025இல் நரேந்திர மோடியின் வருகைக்கும் இடையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 1987இல் இந்தியப்படைகள் நிலை கொண்டிருக்கையில், மிரஜ் விமானங்கள் வட்ட மிட்டுக் கொண்டிருக்கையில் தான் ராஜீவ் காந்தியின் வருகை நிகழ்ந்தபோது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் அச்சமடைந்த நிலையில் இருந்தார்.

ஆனால் இந்திய எதிர்ப்புவாதக் கொள்கையில் செயற்பட்ட ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க



ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற தருணத்தில் பிரதமர் மோடியின் வருகை நிகழ்ந்திருக்கின்ற நிலையில் அது அமைதியாகவும் சுமூகமாகவும் நடைபெற்றிருக்கின்றது.

அதேபோன்று ராஜீவ்காந்தியின் வருகையானது, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை மையப்படுத்தியதாக இருந்தது. குறிப்பாக, தமிழ் மக்களின் பூர்வகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தியதாகவே இருந்தது.

ஆனால்பிரதமர் மோடியின் விஜயமானது, ஒட்டுமொத்தமாக பொருளாதாரத்தை மையப்படுத்தியதாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியாவின் எதிர்கால பொருளாதார மூலோபயத் திட்டங்களை மையப்படுத்தியதாகவே உள்ளது.

அதனடிப்படையில் தான் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்தவகையில் பார்க்கின்ற போது, இந்தியா தற்போது பொறுமையிழந்து விட்டது என்றே கொள்ளவேண்டியுள்ளது. ஏனென்றால், பிரதமர் மோடி தனது இலங்கை விஜயத்தின் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேசியப் பிரச்சினை தொடர்பிலோ, அதிகாரப்பகிர்வு தொடர்பிலோ உத்தியோகபூர்வமாக எந்த விடயங்களையும் குறிப்பிடவில்லை.

அவர் ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாகக் கூட நேரடியாகக் கூறாது, இலங்கையின் அரசியலமைப்பு முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும் என்றே கூறியிருக்கின்றார். மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த நிலைமைக்கு முழுக்க முழுக்க காரணமாக இருப்பவர்கள் வடக்கு, கிழக்கு தமிழ்த் தலைவர்களே. ஏனென்றால் இவர்கள் 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டபோது அதனை ஏற்றுக் கொண்டு மாகாண சபை முறையில் பங்கேற்கவில்லை. குறிப்பிட்ட விடுதலை இயக்கங்கள் மட்டுமே பங்கேற்றன. பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகளும் பங்கேற்கவில்லை. அதன் பின்னர் புலிகளின் தனிநாட்டுக் கொள்கையை தலைவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு பயணித்தார்கள்.

பிரபாகரனின் தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் அங்கீகரித்தார்கள். போரின் முடிவின் பின்னர் அவர்கள் தங்களுடைய எதிர்காலச் செயற்பாடுகள் சம்பந்தமாக மீளாய்வு செய்வில்லை.

மாறாக, டில்லி வழங்கிய அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக ஏற்றுக் கொள்ளாது அவர்களுக்கு கிடைத்த அத்தனை சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தாது வரலாற்றுத் தவறிழைத்தார்கள்.

டில்லியை விடவும் புலம்பெயர் தமிழர்களையும் மேற்குலகத்தையும் அபரிதமாக நம்பிக் கொண்டு 13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு உள்ளிட்ட விடயங்களை முறையாக கையாளாது அவற்றை ஒற்றையாட்சிக்குள் பெற முடியாதென நிராகரித்து விட்டு, பொறுப்புக்கூறல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், வெளிநாட்டு விசாரணையாளர்கள் என்று நடைமுறைச்சாத்தியமற்ற விடயங்களின் மீது காலத்தினைக் கடத்தினார்கள்.

இதன் விளைவாக, தமிழ் மக்களுக்காக இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை மேற்கொண்டிருந்த இந்தியாவுக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமான இடைவெளி அதிகரித்து விட்டது.

அந் நிலைமையானது, நான்கு தசாப்த இந்தியாவின் காத்திருப்புக்குப் பின்னர் 'பொருளாதாரத்தினை மட்டும் மையப் படுத்தியதாக' தனது மூலோபாயத்தினை மாற்றியமைத்துள்ளது.

அதனை அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் நன்கு புரிந்து கொண்டுள்ளது. (22ம் பக்கம் பார்க்க)

# மனிதப் படுகொலையாளியான ரணிலுக்கு அவரது இறுதிக் காலத்திலாவது தண்டனை வழங்குவோம்!

தென்னாபிரிக்காவில் அமுல்படுத்தப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பொறிமுறைக்கு அமைய பட்டலந்த சித்திரவதை முகாமின் பிரதான பொறுப்புதாரிக்கு நீதிமன்றத்தின் ஊடாக தண்டனை பெற்றுக்கொடுப்போம். உலகில் உள்ள சிறந்த விசாரணை நிபுணர்களை அழைத்து மனித படுகொலையாளியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவரது இறுதி காலத்திலாவது தண்டனை வழங்குவோம் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 11 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

பட்டலந்த அறிக்கையில் வரலாற்று சிறப்புமிக்க பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். அதற்கு அப்போதைய அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். 1983 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி தடை செய்யப்பட்டது.1987 ஆம் ஆண்டு வரை இந்த நாட்டில் ஆயுத போராட்டம், மக்கள் போராட்டம் ஏதும் காணப்படவில்லை.

நான்கு ஆண்டு காலமாக அடக்கு முறைகளும், படுகொலைகளும், அழிவுகளும் மாத்திரமே இருந்தது. 1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது யார் தீ வைத்தது. அப்போது எதிர்க்கட்சியாக செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தான் நாடு தழுவிய ரீதியில் தீ வைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடு காணப்பட்ட சந்தர்ப்பத்தில் சுதந்திர கட்சி கலவரத்துக்கு மத்தியில் கொள்ளையடித்தது. இதற்கு பல சாட்சிகள் உள்ளன. இந்த சாபத்தினால் தான் சுதந்திர கட்சி இன்று அழிவடைந்துள்ளது.

இந்த நாட்டில் நல்லிணக்கம் என்ற விடயத்தை மறக்க முடியாது.பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை பற்றி எதிர்க்கட்சிகள் ஏதும் பேசவில்லை. எவ்விதமான உரிய காரணிகளுமில்லாமல் தான் 1982 ஆம் ஆண்டு ஜே.ஆர். தேர்தலை பிற்போட்டார்.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரத்தை உருவாக்கினார். இதனால் சுமார் 3 இலட்சம் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள். இவர்கள் ஒருபோதும் நாட்டுக்கு வரமாட்டார்கள். மனித படுகொலைக்காகவே நாட்டை நாசம் செய்தார்கள்.

ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சிக்கு இந்த நாட்டில் வாழ்ந்த தமிழர்களும், மக்கள் விடுதலை முன்னணியும், கம்யூனிச கட்சியும் ஒருபோதும் அச்சுறுத்தல் விடுக்கவில்லை.ஜே.ஆர். ஜயவர்தன, ரணசிங்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்தார்கள். அதன் விளைவாகவே போராட்டங்களும், கலவரங்களும் தோற்றம் பெற்றன.

மனித படுகொலையாளிகளுக்கு தண்டனையளிப்பதற்காக மாத்திரம் பட்டலந்த விசாரணை அறிக்கையை கொண்டு வரவில்லை. நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவது எமது பிரதான நோக்கமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராகவே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். வடக்கில் நேர்ந்த அழிவு பற்றி பேசுவதில்லையா என்று வடக்கு மக்கள் கேள்வியெழுப்புகிறார்கள். எமது கட்சியில் உள்ள பெரும்பாலானவர்கள் நந்திகடல் வரை சென்று உயிர் தப்பியவர்கள். நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுக்கான விசேட திட்டங்களை இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு முதல் பகுதியில் செயற்படுத்துவோம். புதிய அரசியலமைப்பினை உருவாக்குவோம்.



தென்னாப்பிரிக்காவில் அமுல்படுத்தப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பொறிமுறைக்கு அமைய பட்டலந்த சித்திரவதை முகாமின் பிரதான பொறுப்புதாரிக்கு நீதிமன்றத்தின் ஊடாக தண்டனை பெற்றுக் கொடுப்போம்.

உலகில் உள்ள சிறந்த விசாரணை நிபுணர்களை அழைத்து மனித படுகொலையாளியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவரது இறுதி காலத்திலாவது தண்டனை வழங்குவோம் என்றார்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

12 ஏப்ரல் 2025 - 18 ஏப்ரல் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

12 ஏப்ரல் 2025 - 18 ஏப்ரல் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி தவரத்தினம் பேரின்பராணி

எழதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாக வும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களுடைய 31ம்நாள் நினைவு நாள் 12 ஏப்ரல் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, அன்பு, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 15வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னையா நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களுடைய 15வது ஆண்டு நினைவு நாள் 10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னையா நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பரமநாதன்

வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு கனகசபை பரமநாதன் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை பரமநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த மகேஸ்வரி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 26வது ஆண்டு நினைவு நாள் 29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவரகளை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!**

**உறவுகளே!**

**ஏப்ரல் மாதம்**

**உணவளிக்க முன் வாருங்கள்!**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு கிருஷ்ணபிள்ளை செல்வராஜா அவர்களது 65வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கிருஷ்ணபிள்ளை செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




06 ஏப்ரல் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி இராமதாசன் விஜயஸ்ரீ தம்பதிகளுன் செல்வப்புதல்வி லக்ஷனாவின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி லக்ஷனா தனது பெற்றோர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானமும் வழங்கி மகிழ்ந்தார்.




10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி (மகேஸ்வரி) அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாகபாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




11 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திரவியம் பாலகுமாரன் (கண்ணன்) அவர்களது 50வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு பாலகுமாரன் அவர்கள் தனது மனைவி, பிள்ளைகள், பெற்றோர், நண்பர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு கனகசபை பரமநாதன் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கேசவன் காயத்திரி தம்பதிகளின் செல்வப்புதல்வி திவிசா கேசவனின் 17வது பிறந்த நன்நாளுக்காகவும் (15 ஏப்ரல் 2025) செல்வப்புதல்வி யதிசா கேசவனின் 11வது பிறந்த நன்நாளுக்காகவும் (18 ஏப்ரல் 2025) புதல்விகள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



FEDERAL ELECTION / MONDAY, APRIL 28


#ItsOurVote

# There are ways you can vote early.


## You can vote:



At your assigned advance polling station from Friday, April 18, to Monday, April 21, 9 a.m. to 9 p.m.



At any Elections Canada office until Tuesday, April 22, 6 p.m.



By mail – Apply by Tuesday, April 22, 6 p.m.

Check your voter information card or visit elections.ca for all the ways you can vote.

It's Our Vote

Visit elections.ca for the official information you need to vote

1-800-463-6868 / elections.ca / TTY 1-800-361-8935

Elections Canada

# இளம் தலைமுறையினரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற கனடா தமிழர் தகவலின் 34வது ஆண்டு விருது விழா

கனடாவின் வளர்ச்சியிலும் இங்கு பன்முகப் பண்பாடு சிறந்து ஓங்குவதிலும் தமிழர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று கனடா தமிழர் தகவலின் 34வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் ரொறன்ரோவின் நகர மேயர் திருமதி ஒலிவியா செள தெரிவித்தார்.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் அடர்த்தியாக வாழும் தமிழர்கள் இந்நகரின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பு செய்து வருபவர்கள். கனடிய சமூகத்தின் உயர்ச்சியில் தம்மை இணைத்து வருபவர்கள். 34 வருடங்களாக தொடர்ச்சியாக தமிழர் தகவல் என்ற மாத இதழை வெளியிட்டு வருவதன் ஊடாக தமிழரின் அர்ப்பணிப்பை புரிந்து கொள்ள முடியுமென்று தொடர்ந்து உரையாற்றுகையில் ஒலிவியா செள தெரிவித்தார்.

கனடியத் தமிழரின் மகுட விழாவாக பெருமை பெற்றுத் திகழும் தமிழர் தகவலின் விருது விழா 34வது ஆண்டாக ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் ஏப்ரல் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. முழுமையாக இளைய தலைமுறையினரின் முன்னெடுப்பில் இடம்பெற்ற இவ்விழா நேரக்கட்டுப்பாட்டுடன் சுருக்கமான உரைகளோடு நிகழ்ந்தது.





இளமுகில் சுவடு என்ற தலைப்பிலான 34வது ஆண்டு மலர் வெளியீடு முதல் அமர்வாக தமிழில் இடம்பெற்றது. ரொறன்ரோ பல்கலைக்கழக மாணவன் அக்சே ஜெயபாலசிங்கம் கலப்பற்ற தனித்தமிழில் தமது தலைமை உரையை






நிகழ்த்தினார். கிருக்ஷ்ணராஜ குருக்களின் ஆசியுரையை அடுத்து, திரு. குயின்ரஸ் துரைசிங்கம் மலர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். 164 பக்கங்களில் விளம்பரங்கள் எதுவுமின்றி 64 ஆக்கங்களோடு ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. இதில் 14 ஆக்கங்கள் இளந்தலைமுறையினரால் எழுதப்பட்டவை.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுவதற்காக இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த அன்பு அறிவிப்பாளர் திரு.பி.எச்.அப்துல் ஹமீத் சிறப்புரை ஆற்றினார்.

விழாவின் இரண்டாவது அமர்வு ஆங்கிலத்தில் 34வது ஆண்டு விருதுகள் வழங்குவதாக அமைந்தது. ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபையின் தலைவர் திரு. நீதன் சண்முகராஜா இதற்குத் தலைமை தாங்கினார். விருதுகள் தெரிவுக்குழுவின் தலைவரான ரொறன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் வண. அமுது ஜோசெப் சந்திரகாந்தனின் நெறிப்படுத்தலில் விருது பெறுவோர்களுக்கான சான்றுரைகளை அனோஜினி குமரதாசன், அமிருதா சசிகரன், கெவின் தெய்வேந்திரன், அக்சன் ரவிசங்கர் ஆகிய இளையோர் நிகழ்த்தினர்.

கலைத்துறைக்கான விருதை பிரபல மிருதங்க வித்துவான் இராஜலிங்கம் வாசுதேவனும், நான்கு தசாப்த எழுத்துப்பணிக்கான விருதை சிறீரஞ்சனி விஜேந்திராவும், வணிக சாதனை முன்னோடி விருதை திரு.பத்மநாதன் ரங்கநாதனும், பன்முக ஆற்றல் மாணவ விருதை செல்வன் நரேக்ஷ் கொட்வினும், தமிழ் ஊடக சாதனைப் பெண் விருதை திருமதி ராஜி அரசரட்ணமும், சமூகப்பணிக்கான விருதை ஒன்ராறியோ முதுதமிழர் மன்றமும், வாழ்நாள் சாதனையாளர் விருதை அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதும் பெற்றனர். விருதுகளையும், தங்கப் பதக்கங்களையும் நகர மேயர் ஒலிவியா செள தமிழர் சமூக முன்னணிப் பிரமுகர்களுடன் இணைந்து வழங்கி விருதாளர்களை மாண்பேற்றினர். முதுதமிழர் மன்றத் தலைவர் வழக்கறிஞர் மனுவல் ஜேசுதாசன் நன்றியுரை வழங்கினார்.





செல்வி. பிரைட்னி குலேந்திரனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இரண்டு மணி நேர விழா செல்விகள் அபர்ணா கேதா மற்றும் பூஜா தேவதாஸ் ஆகியோரின் கனடிய தேசிய கீதத்துடன் நிறைவு பெற்றது.

இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளரும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழமுரசு மற்றும் முரசொலி தினசரிகளின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றிய திரு எஸ். திருச்செல்வம் தமிழர் தகவல் சஞ்சிகையின் வெளியீட்டாளராகவும், முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com



# 1.8 பில்லியன் டொலர் வங்கி மோசடி:- பெல்ஜியத்திற்கு தப்பியோடிய இந்திய வைரக்கல் வியாபாரி கைது!

இந்தியாவிடம் இருந்து நாடு கடத்த கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து தப்பியோடிய வைர வியாபாரி மெஹூல் சோக்ஸி பெல்ஜியத்தில் கைது செய்யப்பட்டதாக புது தில்லி அதிகாரிகள் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

65 வயதான அவர் 2018ஆம் ஆண்டில் இந்தியாவின் இரண்டாவது பெரிய அரசு நடத்தும் கடன் வழங்குநரான பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு (PNB) எதிராக கிட்டத்தட்ட 1.8 பில்லியன் டாலர் (€1.58 பில்லியன்) மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

இந்த மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பிற குற்றவாளிகளில் சோக்ஸியின் மருமகன் மற்றும் தப்பியோடிய பிரபல நகை வடிவமைப்பாளர் நிரவ் மோடி பிற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களது நகை நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சில வங்கி அதிகாரிகள் அடங்குவர்.

நகைகளை வாங்கவும் இறக்குமதி செய்யவும் கடன் திரட்டுவதற்காக போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்த மோசடி நடந்ததாகக் கூறப்படுகிறது. இது இந்திய வரலாற்றில் மிகப்பெரிய வங்கி மோசடியாகக் கருதப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகள் வருவதற்கு முன்பே சோக்ஸி இந்தியாவை விட்டு வெளியேறிவிட்டார்.

இந்திய அதிகாரிகள் சோக்ஸி தனது ஒப்படைப்பை எதிர்த்து வழக்குத் தொடுத்து மருத்துவ காரணங்களுக்காக ஜாமீன் கோர வாய்ப்புள்ளதாக நம்புகின்றனர். சோக்ஸியின் மருமகன் நீரவ் மோடியை 2019 ஆம் ஆண்டு இங்கிலாந்து அதிகாரிகள் கைது செய்த பின்னர், அவர் லண்டனில் இருந்து நாடு கடத்தப்படுவதற்காகக் காத்திருக்கிறார்.

ஒரு வைர வியாபாரியின் மகனான மோடி ஒரு சர்வதேச சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பினார் மற்றும் உலகெங்கிலும் உள்ள பல முக்கிய நகரங்களில் ஆடம்பர நகைக் கடைகளைத் திறந்தார் .



நடிகைகள் நவோமி வாட்ஸ், கேட் வின்ஸ்லெட் மற்றும் பிரியங்கா சோப்ரா-ஜோனாஸ் உள்ளிட்ட பல பிரபல வாடிக்கையாளர்களுக்கும் அவர் சேவை செய்தார்.

2017 ஆம் ஆண்டில் மோசடி என்று கூறப்படுவதற்கு முன்பு, ஃபோர்ப்ஸ் பத்திரிகை மோடியின் சொத்து மதிப்பு 1.73 பில்லியன் டாலர்களாக இருந்ததாக மதிப்பிட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நிரவ் மோடியின் கடைசிப் பெயர் ஒரே மாதிரியாக உள்ளது, ஆனால் இருவருக்கும் எந்த தொடர்பும் இல்லை.

# ரஷ்யா சொல்வதை விட ரஷ்ய இராணுவத்தினர் பலவீனமாக உள்ளனர்! உக்ரேன் படையினரால் கைது செய்யப்பட்ட சீனர்கள் தெரிவிப்பு!




உக்ரைன் படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு சீனா பிரஜைகள் ரஸ்யா தெரிவித்து வருவதற்கு மாறாக அந்த நாட்டின் இராணுவம் பலமான நிலையில் இல்லை என தெரிவித்துள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்தில் கிழக்கு உக்ரைனில் ரஸ்யாவிற்காக போரிட்டுக் கொண்டிருந்த வாங் குவான்ஜங் மற்றும் ஜாங் ரென்போ ஆகியோர் பிடிபட்டனர் இருவரும் உக்ரைன் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இராணுவ சீருடையுடன் கைககள் கட்டப்பட்ட நிலையில் இவர்களை உக்ரைனின் தேசிய செய்தி முகவர் அமைப்பான உக்ரின்போர்ம் ஏற்பாடு செய்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்தனர்.

ரஸ்யர்கள் தெரிவிப்பது அனைத்தும் பொய்,அவர்கள் போலியானவர்கள் ரஸ்யா தெரிவிப்பது போல உண்மையில் அது வலுவான நிலையில் இல்லை, அவர்கள் சொல்வது போல உக்ரைன் மோசமான நிலையில் இல்லை என சீனா பிரஜைகள் தெரிவித்தனர்.

நாங்கள் சீனா சார்பாக போரிடவில்லை சீன அரசாங்கத்திற்கும் எங்களிற்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இணைய விளம்பரங்கள் மூலம் எங்களை கூலிப்படையாக சேர்த்துக் கொண்டனர் என அவர்கள் தெரிவித்தனர்.

நான் டிக்டொக் விளம்பரம் ஊடாக தெரிவு செய்யப்பட்டேன் என தெரிவித்த வாங்நான் அதன் பின்னர் நாங்கள் வாகனங்கள் மூலம் தென் மேற்கு ரஸ்யாவின் கசானிற்கு சென்றோம், அதன் பின்னர் கிழக்கு உக்ரைனின் டொனெட்ஸ்க் பிராந்தியத்திற்கு சென்றோம், அங்கு ஜாங் உடன் என்னை இராணுவத்தில் இணைத்தார்கள் என தெரிவித்துள்ளார்.

நான் ரஸ்யாவில் சுற்றுலாப் பயணியாகயிருந்த வேளை விளம்பரமொன்றை பார்த்தேன், இரண்டு மில்லியன் ஊதியம் என தெரிவித்தார்கள் நான் ரஸ்ய இராணுவத்தில் இணைய தீர்மானித்தேன் என தெரிவித்தார். இருவரும் டொனெட்ஸ்கில் கைது செய்யப்பட்டனர், இவர்களின் படங்கள் 8ம்திகதி வெளியாகின.

முன்னரங்கிற்கு வந்த உடனேயே கைது செய்யப்பட்டோம் நாங்கள் உக்ரைன் படைவீரர்கள் எவரையும் கைது செய்யவில்லை என இருவரும் தெரிவித்தனர்.

ரஸ்ய முகாம்களில் காணப்படும் நிலை குறித்த கேள்விக்கு மின்சாரமும் குடிநீரும் இல்லை என இருவரும் தெரிவித்துள்ளனர்.

# ஹவார்ட்டை இனிமேல் கற்றலிற்கான இடமாக கருத முடியாது! நிதி வழங்குவதை நிறுத்த வேண்டும் - டொனால்ட் டிரம்ப்

ஹவார்ட் பல்கலைகழகத்தை ஒரு வேடிக்கை என வர்ணித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் அதற்கான நிதிகளை நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹவார்ட் நிர்வாகம் வெளியாட்கள் தன்னை கண்காணிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என டிரம்ப் விடுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்துள்ள நிலையிலேயே டிரம்ப் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

ஹவார்ட்டை இனிமேல் கற்றலிற்கான சிறந்த இடமாக கருத முடியாது என குறிப்பிட்டுள்ள டொனால்ட் டிரம்ப் உலகின் சிறந்த பல்கலைகழகங்களின் பட்டியலில் இடம் பெற தகுதியானதாக கருதக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார். ஹவார்ட் என்பது ஒரு நகைச்சுவை ஹவார்ட் வெறுப்புணர்வையும் முட்டாள்தனத்தையும் போதிக்கின்றது அதற்கு இனி மேலும் அரசாங்கத்தின் உதவிகளை வழங்ககூடாது என டிரம்ப் தெரிவித்துள்ளார்.



# அநுரா யாரோடு?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

நான்கு தடவைகள் இந்திய பிரதமர் இலங்கைக்கு வந்து விட்டார். இந்த நான்கு தடவைகளிலும் அவர் நான்கு இலங்கை ஜனாதிபதிகளை சந்தித்திருக்கிறார். பத்தாண்டு காலத்துக்குள் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு நான்கு பேர்களிடம் கைமாறும் அளவுக்கு இச்சிறிய தீவின் அரசியல் ஸ்திரமற்றதாக இருந்து வருகிறது. ஆனாலும் பிரதமர் மோடியின் வருகையின் போது மாறாத இரண்டு விடயங்கள் உண்டு. ஒன்று இனப்பிரச்சினை தொடர்பான இந்திய நிலைப்பாடு. இரண்டாவது மீனவர்களின் விவகாரம். அதுவும் தமிழ் மக்களோடு தொடர்புடையது தான்.

இந்தியப் பிரதமரின் வருகையை மூன்று தளங்களில் வைத்துப் பார்க்க வேண்டும். முதலாவது பிராந்தியத் தளம். இரண்டாவது கொழும்பு. மூன்றாவது தமிழ் நோக்கு நிலை.

பிராந்தியத்தில் இந்தியா அயலவர் முதலில் என்று கூறிக் கொள்கிறது. ஆனால் நடைமுறையில் அதன் அயலில் உள்ள சிறிய நாடுகளை இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் இருந்து சீனா எங்கே கழட்டி எடுத்து விடுமோ என்ற நிச்சயமின்மைதான் காணப்படுகின்றது. நேபாளம், பங்களாதேஷ், மாலை தீவுகள் ஆகிய மூன்று நாடுகளிலும் இந்தியாவின் பிடி சகட யோகமாகத் தான் இருக்கிறது. இலங்கையிலும் அப்படித் தான். இப்பொழுது இலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருப்பது சீன இடது மரபில் வந்த ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்திதான்.

இப்படிப்பட்டதோர் பிராந்தியப் பின்னணிக்குள் இந்தியப் பிரதமரின் வருகையின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள், காணொளிகளில் பிரதமர் மோடிக்கு அருகே அனுர பணிவான ஒரு இளைய சகோதரனைப் போலவே காணப்படுகிறார். அயலில் உள்ள சிறிய நாடுகளுக்கும் தனக்குமான பிடி சகட யோகமாகக் காணப்படும் ஒரு பின்னணிக்குள் இலங்கைத்தீவில் தேசிய மக்கள் சக்தியை எப்படித் தன் செல்வாக்கு மண்டலத்துக்குள் பேணுவது என்பது தான் இப்பொழுது இந்தியாவுக்குள்ள பிரதான சவால். இது முதலாவது.

இரண்டாவது கொழும்பு இப்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியின் குழந்தை. பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கா விட்டால் அதற்கு எதிர்காலம் இல்லை. சில தசாப்தங்களுக்கு முன்பு இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிராகக் காணப்பட்ட ஜேவிபிக்கு இப்பொழுது இந்தியா தொடர்பான அதன் கொள்கைகள் மாறியிருப்பதைக் காட்டவேண்டிய நிர்பந்தம் உண்டு.



புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் இலங்கைக்கான சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அவர் இங்கு ஆட்சி மாற்றத்துக்கு தமிழ் மக்கள் நல்கிய ஆதரவை பாராட்டிப் பேசினார். அதாவது சீனா, புதிய அரசாங்கத்தை எதிர்பார்ப்போடு பார்க்கிறது என்று பொருள். இந்த எதிர்பார்ப்பானது ஏற்கனவே தனக்குள்ள இந்தியாவின் எதிரி என்ற படிமத்தைப் புதுப்பிக்கக் கூடியது என்பது தேசிய மக்கள் சக்திக்கு தெரிகிறது.

எனவே பேரரசுகளின் இழு விசைகளுக்குள் சிக்காமல் எப்படிப் பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்பதுதான் அவர்களுக்குள்ள சவால்.அதை நோக்கியே அவர்கள் இந்தியாவை அணுகுவார்கள்.

மேலும் இந்தியாவை அரவணைப்பதன் மூலம் இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவிடம் இருந்து வரக்கூடிய அழுத்தங்களையும் குறைக்கலாம்.



மூன்றாவது தமிழ் நோக்கு நிலை.கடந்த 15 ஆண்டுகளிலும் இந்தியா தமிழர் தொடர்பான அதன் நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் காட்டியிருக்கவில்லை. 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் அல்லது யாப்பில் இருப்பதை அமுல்படுத்த வேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப் பாடாகக் காணப்படுகின்றது. ஆனால் இந்த கோரிக்கையை இந்தியா கொழும்பிடம் தான் முன்வைக்க வேண்டும். மட்டுமல்ல. இந்தியாவுக்கும் அதில் கூட்டுப்பொறுப்பு உண்டு. 13ஆவது திருத்தம் என்பது இந்தியாவின் குழந்தை. எனவே கடந்த 15 ஆண்டுகளாக ஏன் அதனை முழுமையாக அமுல்படுத்தவில்லை என்ற கேள்வியை இந்தியா கொழும்பிடமும் தன்னிடமும் தான் கேட்டுக் கொள்ள வேண்டும். இலங்கைத் தீவின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையின் கீழ் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. ஆனால் கடந்த 38 ஆண்டுகளாக அந்த நிறைவேற்று அதிகாரம் அந்த திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தாமல் தடுப்பதற்குத் தான் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது யாப்புக்கு எதிராகத்தான் நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதோர் அபகீர்த்தி மிக்க யாப்புப் பாரம்பரியத்தை கொண்ட ஒரு நாட்டிடம் திரும்பத் திரும்ப 13ஐ அமுல்படுத்து என்று ஏன் இந்தியா கூறிக் கொண்டிருக்கிறது?

தமிழ் மக்களின் பக்கம் நிற்பதன் மூலம் கொழும்பைப் பகைத்துக் கொள்ள இந்தியா தயாரில்லை? 13ஆவது திருத்தம் என்பது இலங்கைத்தீவில் இந்தியாவின் இயலாமையைக் காட்டும் ஒரு குறியீடுதான். இந்த விடயத்தில் 13 ஆவது திருத்தம் மற்றும் இந்திய இலங்கை உடன்படிக்கை தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு பொருத்தமானது.கடந்த வாரம் இந்தியப் பிரதரைச் சந்தித்தபின் கஜேந்திரகுமார் பின்வருமாறு கூறியிருக்கிறார் இலங்கைத் தீவில் இந்தியாவுக்கு மட்டும்தான் அதன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒரு பார்வைப்பங்களிப்பு உரித்து இருக்க முடியும் என்பதை நாங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றோம்... வேறு எந்த நாட்டுக்கும் தங்களுடைய தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் இலங்கையை அணுகும் உரிமையோ அருகதையோ இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தினோம். இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு என்ற அம்சத்தில் இலங்கைத்தீவு இந்தியாவுக்கு மற்றைய நாடுகளை விட முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும் என்ற எமது நிலைப் பாட்டைக் குறிப்பிட்டோம். விசேடமாக வடக்கு கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்பதை இந்தச் சந்திப்பில் சொன்னோம்.

இது முன்னணியின் புதிய நிலைப்பாடு அல்ல. இந்திய இலங்கை உடன்படிக்கை தொடர்பாக முன்னணி தொடர்ச்சியாக இதே கருத்தைத்தான் கூறி வருகிறது. இந்தியாவின் பிராந்திய நலன்களை பாதுகாக்கும் நோக்கிலான அந்த அணுகுமுறை மிகவும் தெளிவானது பொருத்தமானது.

கடந்த 15 ஆண்டுகளாக இந்தியா தமிழ் மக்களின் பக்கம் நிற்பதன் மூலம் கொழும்பைப் பகைத்துக் கொள்ளத் தயாரில்லை என்ற செய்தியை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது. ஆனால் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் சீனா எப்பொழுதோ நுழைந்து விட்டது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா 100 ஆண்டு குத்தகைக்குப் பெற்று விட்டது. கொழும்பில் ஒரு துறைமுக நகரத்தை கட்டியெழுப்பி வருகிறது.

இப்படிப்பட்டதோர் உள்நாடு பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் சூ ழலின் பின்னணியில் வைத்தே இந்தியப் பிரதமரின் வருகையை விளங்கிக் கொள்ள வேண்டும்

இரு தசாப்தங்களுக்கு முன்பு வரை இந்தியாவின் எதிரியாக காணப்பட்ட ஒரு கட்சியானது இப்பொழுது இந்தியப் பிரதமருக்கு கௌரவப் பட்டம் வழங்கியிருக்கிறது. அரசியலில் நிரந்தரப் பகைவரும் இல்லை நிரந்தர நண்பர்களும் இல்லை.

ஜேவிபியின் முதலாவது ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்துக்கு சீனா ஆயுதங்களை வழங்கியது. ஆனால் அதே சீனா தான் ஜேவிபிக்கு கொம்யூனிச புத்தகங்களையும் வழங்கியது. ஜேவிபியின் முதலாவது போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின் சிறை வைக்கப்பட்ட ஜேவிபிக்காரர்களிடம் ஒரு சிறை அதிகாரி என்னென்ன புத்தகங்கள் வாசிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அவர்கள் ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். அநேகமானவை சீன கொம்யூனிச புத்தகங்கள். அந்தப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்து அவர்களுக்கு கொடுத்த அந்த அதிகாரி சிரித்துக் கொண்டே தன் கையில் வைத்திருந்த ரி-56 ரக ரைஃபிளைக் காட்டிச் சொன்னாராம். சீனா உங்களுக்கு இந்தப் புத்தகங்களைத் தந்தது. எங்களுக்கு இந்த துவக்கைத் தந்தது என்று இது தான் அரசியல்.

அன்றைக்கு சீனா மட்டுமல்ல இந்தியாவும் சிறிமாவோவின் அரசாங்கத்துக்கு ஆதரவாக நின்றது. இது நடந்தது கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்பு. அதன்பின் இந்திய-இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின் ஜேவிபி அதன் இரண்டாவது போராட்டத்தைத் தொடங்கியது.அ து முழுக்க முழுக்க இந்திய படையினரின் பிரசன்னத்துக்கு எதிரானது. அந்த இரண்டாவது போராட்டத்தோடு ஜேவிபியின் ஆயுதப் போராட்ட முனைப்பு முற்றாக நசுக்கப்பட்டது.

இவ்வாறு சீன இந்திய உதவிகளோடு நசுக்கப்பட்ட ஒரமைப்பு. இப்பொழுது இந்தியப் பிரதமருக்கு கௌரவப் பட்டத்தை வழங்குகிறது. இதுதான் அரசியல். அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தரப் பகைவர்களும் இல்லை.

சிங்கள மக்கள் ஓர் அரசுடைய தரப்பு பெரிய இனம். ஆனால் இராஜதந்திரம் என்று வரும் பொழுது விவேகமாக முடிவுகளை எடுக்கின்றார்கள். அரசற்ற சிறிய இனமாகிய தமிழ் மக்களும் விவேகமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

விவேகமான முடிவென்பது 13ஐ ஏற்றுக் கொள்வதோ அல்லது எக்கிய ராஜ்ஜியவை ஏற்றுக் கொள்வதோ அல்லது நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தைக் கைவிடுவதோ அல்ல. உடனடியாகவும் முதலாவதாகவும் ஒருமுடிவை எடுக்க வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் கொடுத்த வெற்றி நிரந்தரமானது அல்ல என்பதனை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் நிரூபிக்க வேண்டும்.

மோடியின் வருகையையொட்டி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவர் ஆங்கிலத்தில் முகநூலில் பின்வருமாறு எழுதியிருந்தார்....தென்னாசியாவின் சக்தி மிக்க தலைவர்கள். ஒருவர் தனது சிறு பிராயத்தில் புகையிரதத்தில் தேநீர் விற்றவர். மற்றவர் புகையிரதத்தில் சிற்றுண்டிகள் விற்றவர். இருவருமே ஒரு காலம் அரசியல் இயக்கங்களின் உறுப்பினர்களாக இருந்தவர்கள். ஒன்று ஆர்.எஸ்.எஸ்.அதிலிருந்து பிஜேபி எழுச்சி பெற்றது. மற்றது, ஜேவிபி. அதிலிருந்து என்பிபி எழுச்சி பெற்றது. இரண்டு கட்சிகளுக்கும் கொள்கைகள் வேறு வேறாக இருந்தாலும், இரண்டு கட்சிகளுமே ஊழலுக்கும் சுதந்திரத்திற்கு பின்

(22ம் பக்கம் பார்க்க)

# கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கக் காத்திருக்கும் கொக்குகள்

எதிர்வரும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரசியல் பொதுவெளியில் தொழிற்படும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படாத தமிழ் அரசியல் கட்சிகளும் தமக்குள்ளே கூட்டுக்களை ஏற்படுத்தியுள்ளன. இக்கூட்டுக்களின் பிரதான நோக்கம் ஆட்சி அதிகாரத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடிப்பதைத் தவிர மக்கள் நலன் சார்ந்த எதுவுமில்லை என்பது எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய 'இலகு எண் கணிதம்' ஆகும்.

வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று தம்மை அழைத்துக் கொள்ளும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் அதாவது அக்கட்சியின் ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் ஸ்ரீகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் உள்ளடங்கிய தமிழ்த் தேசியக் கட்சியும் ஜனாதிபதி சட்டத்தரணி கே வி தவராசாவின் ஜனநாயகத் தமிழரசுக் கட்சியும் ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை எனும் பெயரிலான கூட்டொன்றும். ஏற்கெனவே இணைந்து கொண்டிருந்த ரெலோ, ஈ பி ஆர் எல் எப், புளொட் ஆகியவற்றுடன் புதிதாக இணைந்துள்ள சமத்துவக் கட்சியையும் பங்காளிக் கட்சிகளாகக் கொண்டதும் ஏற்கெனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்னும் பெயரில் இயங்கிக் கொண்டிருப்பதுமான கூட்டும் களத்தில் நிற்கின்றன.



கிழக்கு மாகாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் (ரி எம் வி பி) வியாழேந்திரன் தலைமையிலான தமிழர் முற்போக்குக் கழகம் மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆகிய இரு அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளும் இணைந்து 'இரவல் புடவையில் இது நல்ல கொய்யகம்' எனும்படியாக 2019 இருந்தே அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் அனுமதியுடன் செயல்பட்டு வந்துள்ள தம்பியப்பா கோபாலகிருஷ்ணனின் தலைமையிலான 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் அரசியல் கட்சியின் பெயரைத் தார்மீக மற்றும் சட்ட விழுமியங்களுக்கு முரணாகப் பலாத்காரமாகத் தமது கூட்டிற்குச் சூட்டி ஒரு சர்ச்சைக்குரிய கூட்டணியாகத் தம்மை அரசியல் பொது வெளியில் முகம் காட்டியுள்ளன.

தமிழரசுக் கட்சியானது வழமை போல தனித்தவில் அடிக்க, தனித்து விடப்பட்டுள்ள ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் யாருக்குச் 'சல்லாரி' போட



லாம் எனக் குழம்பிப்போய் உள்ளன.

மொத்தத்தில் தமிழர் தரப்பு அரசியல் குழம்பிய குட்டையாகக் காட்சியளிக்கக் கூட்டுச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளும் தனித்து விடப்பட்ட கட்சிகளும் 'வாக்கு' மீன்பிடிப்பிற்காக வலையுடனும் அத்தாங்குகளுடனும் காத்து நிற்கின்றன. ஆட்சி அதிகாரத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை அதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒப்பீட்டளவில் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் இருந்த ஆதரவு தற்போதும் முழுமையாக இருப்பதை உறுதியாகக் கூற முடியாவிட்டாலும் கூட 'அனுர குமார திசாநாயக்க அலை' இன்னும் முற்றாக ஓய்ந்து விடவில்லை.



அதேவேளை தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலத்திலும் இனப்பிரச்சனைக்கான தீர்வையோ குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தின் முழுமையானதும் முறையானதுமான அமுலாக்கலையோ எதிர்பார்க்க முடியாது என்ற சந்தேகம் தமிழ் மக்களிடையே மெல்லத் தலை நீட்டத் தொடங்கி விட்டது.

நாடளாவியரீதியில் சிந்திக்கும் போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் பல முற்போக்கான சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் அவதானிக்க முடிகிறது.

அதே வேளை அரச நிர்வாகக் கட்டமைப்புகளைச் சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கைகள் (உதாரணமாகக் கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவைக்கு -University Council- வெளிவாரியாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ளமை) தமிழ் மக்களுக்கு அதிருப்தியை அளித்திருக்கின்றன.

இக்கட்டத்தில் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

நியாயமாகச் சிந்திக்கின்ற எவரும் தமிழ்த் தேசியக் கருத்தியலுக்கும் கிழக்கின் தனித்துவ அரசியல் அணுகுமுறைக்கும் எதிராக இருக்க மாட்டார்கள்.

ஆனால் நடைமுறையிலுள்ள கள நிலைமை என்னவென்றால் வடக்கைத் தளமாகக் கொண்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் தேசியம் பேசுவது தத்தம் கட்சி நலன்களுக்காகவும் தலைமைத்துவ நலன்களுக்காகவுமே தவிர மக்கள் நலன்களுக்காக அல்ல.

அதுபோல கிழக்கைத் தளமாகக் கொண்டு இப்போது இரவல் பெயரில் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகள் கிழக்கின் தனித்துவம் பேசுவது தத்தம் கட்சி நலன்களுக்காகவும் தலைமைத்துவத்துவ நலன்களுக்காகவே தவிர மக்கள் நலன்களுக்காக அல்ல. இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஓர் உணர்வுபூர்வமான விடயமாகவிருந்தாலும் முழு நாட்டிலும் ஊழல் மோசடிகளற்ற- சட்டம் ஒழுங்கைப் பாரபட்சமின்றி பேணுகின்ற ஆட்சி அமையுமாயின் அதனால் விளையக்கூடிய அனுகூலங்களைத் தமிழர்களும் தான் அனுபவிக்கப் போகிறார்கள் என்பது யதார்த்தம். அதற்காகத் 'தேசிய இனம் எனும் அடிப்படையில் தமிழர்கள் தமது உரிமை சார்ந்த இருப்பு சார்ந்த விடயங்களையிட்டு அலட்சியமாக இருக்க வேண்டுமென்பதில்லை.

ஆனால் அந்த விடயம் கடந்த காலங்களில் தேர்தல் தேவைகளுக்காகச் சுலோகங்களாலும் கற்பனாவாதக் கோரிக்கைகளாலும் கோஷங்களாலும் ஆர்ப்பாட்டங்களாலும் பேரணிகளாலும் கட்சிகளின் மாநாட்டுத் தீர்மானங்களாலும் பாராளுமன்ற உரைகளினாலும் பத்திரிகை அறிக்கைகளாலும் ஊடகச் சந்திப்புக்களால் மட்டுமே அணுகப்பட்டது போல் அல்லாமல்



அறிவுபூர்வமாகவும் யதார்த்த பூர்வமாகவும் நடைமுறைச் சாத்தியமான உபாயங்களுடனும் அணுகப்பட வேண்டியதொன்றாகும்.

எனவே, வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு இன்று தேவை கடந்த 75 வருட கால அரசியல் மனப்போக்கிலிருந்தும் அணுகு முறைகளிலிருந்தும் முற்றாக விடுபட்டதொரு 'மாற்று அரசியல்' ஆகும்.

அந்த மாற்று அரசியல் உண்மையும் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும் உடையதாய் முழுக்க முழுக்க மக்கள் நலன்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டமைதல் அவசியம்.

அந்த மாற்று அரசியல் உள்ளூர் அதிகார சபை மட்டத்திலிருந்து கட்டியெழுப்பப்படவேண்டும். அதற்கு எதிர்வரும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலைப் பரீட்சார்த்தக் களமாகப் பயன்படுத்த வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தயாராகவேண்டும்.

மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் கையாண்ட அளவுகோலை உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலில் உபயோகிப்பது உசிதமில்லையென்பதும் உணரப்படவேண்டும்.

இவற்றின் அடிப்படையில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் அவாவிநிற்கும் மாற்று அரசியலுக்குத் தயாராவதற்கான மார்க்கம் என்னவெனில் எதிர்வரும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் உண்மையும் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும் உடைய முழுக்க முழுக்க மக்கள் நலன்களை மட்டுமே நோக்கமாகக் கொண்ட வேட்பாளர்களை அடையாளம் கண்டு (அத்தகைய வேட்பாளர்கள் சுயேச்சைக் குழுவில் இடம் பெற்றிருந்தாலும்

**கட்டுரையாளர்:-**
**மட்டக்களப்பில் இருந்து**
**தம்பியப்பா**
**கோபாலகிருஷ்ணன்**



கூட) அத்தகையோர் எந்தக், கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கணக்கிலெடுக்காமல் அத்தகைய மக்கள் சேவகர்கள் உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினர்களாகத் தெரிவாகும்



வகையில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் வாக்களிப்பது தான் இந்த மாற்று அரசியலை ஏற்படுத்துவதற்கான 'பிள்ளையார்சுழி' ஆகும்.

அதாவது வடக்குகிழக்கில் உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிர்வாகத்தை ஒரு தனிப்பட்ட கட்சியிடம் ஒப்படைப்பதை நோக்கமாகக் கொண்டு வாக்களிக்காமல் அதனை உண்மையான மக்கள் சேவகர்களிடம் (அத்தகையோர் பலகட்சிகளின் சார்பிலும் தெரிவாகியிருப்பர்) ஒப்படைப்பதை நோக்கமாகக் கொண்டு வட்டார உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வகையில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். அது போலவே உண்மையும் நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் தலைமைத்துவ ஆளுமையும் இல்லாதவர்களையும் எதிர் காலத்தில் அதிகாரத்தில் இருந்தால் அதிகாரதுஸ்பிரயோகம் செய்வார்கள் எனக் கருதப்படுபவர்களையும் அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவ்வாறானவர்களைத் தயவுதாட்சண்யமின்றித் தோற்கடிக்க வேண்டியதும் மக்களின் கடமையாகும்.



# ஊர் யாரோடு?



பிரதமர் ஹரிணி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு வருகை தந்துள்ளார். 50 ஆண்டுகளுக்குப் பின் நடந்த கும்பாபிஷேக வைபவத்தில் அவர் விருந்தினராக வரவேற்கப்பட்டுள்ளார். அங்கே தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரையும் காண முடியவில்லை.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குத் தமிழ் மக்களின் போராட்டத்தில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு. 1968 ஜீன் மாதம் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் போராடி வெற்றி பெற்ற கோவில் அது. அந்தப் போராட்டத்திற்கு கலாநிதி சண்முகதாசன் தலைமையிலான சீன சார்பு கொம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கியது. வெற்றி பெற்றது.

ஆனால் இங்குள்ள முரண் என்னவென்றால் அந்தப் போராட்டத்தில் கொம்யூனிஸ்ட் கட்சி போராடும் தரப்பின் பக்கம் நின்று தலைமை தாங்கியது. தமிழ்த் தலைவர்களில் முக்கியஸ்தராகிய சுந்தரலிங்கம் ஒடுக்கும் தரப்பின் பக்கம் நின்றார். குறிப்பிட்ட சில சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்களை கோவிலுக்குள் அனுமதிக்க கூடாது என்ற தரப்பின் பக்கம் சுந்தரலிங்கம் நின்றார்.

அவர் அடங்காத் தமிழன் என்று அழைக்கப்பட்டவர். எனினும் தேசிய விடுதலை என்பது சமூக விடுதலை இல்லாமல் முழுமை அடையாது என்ற அடிப்படை விளக்கம் அவரிடம் இருந்திருக்கவில்லை. ஆனால் இது நடந்து கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளின் பின் 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது சமூக விடுதலை இல்லாமல் தேசிய விடுதலை இல்லை என்ற கொள்கை விளக்கம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் உருவாகியிருந்தது. எனினும் இப்பொழுதும் கூட தமிழ்த் தேசிய முகமூடி அணிந்திருக்கும் பலரிடம் இந்த விளக்கம் இல்லை. அல்லது அது அவர்களுடைய வாழ்க்கை முறையாக இல்லை.

சண்முகதாசன் தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் தொடர்பில் விமர்சனங்களைக் கொண்டிருந்தாலும் தெளிவான ஆதரவு நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார். அவரிடமிருந்து 1964இல் பிரிந்து சென்றவர் தான் ஜேவிபியின் தலைவராகிய ரோகன விஜயவீர.

இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட போது அது தொடர்பாக சண்முகதாசன் பின்வருமாறு கூறியிருக்கிறார்... பழைய இடதுசாரி கட்சிகள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்க்கத் தவறியதால் வகுப்பு வாத அரைப் பாசிச ஜேவிபி சிங்கள இனத்தின் இரட்சகராகத் தோன்றி இந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்த்தது. அரசாங்க எதிர்ப்பு தமிழர் எதிர்ப்பு இந்திய எதிர்ப்பு உணர்வுகளை ஜேவிபி நன்கு பயன்படுத்திக் கொண்டது

சண்முகதாசன் தலைமை தாங்கிய சீனச் சார்பு கொம்யுனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிய ரோகன விஜயவீர 1965இல் ஜேவிபியை ஸ்தாபித்தார். அதாவது மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு.

அந்த ஜேவிபியை அடித்தளமாக கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்பொழுது ஆட்சி செய்கின்றது. இப்படிப்பட்டதோர் பின்னணியில் அதன் பிரதமரான ஹரிணி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு வந்தது. தற்செயலானதா ? அல்லது திட்டமிடப்பட்டதா?

பிரதமர் ஹரிணி அவருடைய வடக்கு விஜயத்தின் போது அவர் எங்கெங்கே போகிறார் என்று பார்த்தால் தமிழ்த்தேசிய நிலைப்பாடு தொடர்பாக விமர்சனங்களை கொண்ட அல்லது தமிழ்த்தேசிய நிலைப்பாடு தொடர்பில் முழு உடன்பாடு இல்லாத இடங்கள் நபர்களைத் தேடிச் அவர் செல்வது தெரிகிறது.

ஹரிணி மட்டுமல்ல அரசாங்கத்தின் பிரதானிகள் அடிக்கடி வடக்குக்கு வருகிறார்கள். உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சபைகளை கைப்பற்றும் நோக்கத்தோடு தீயாக வேலை செய்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவர்களுக்கு கொடுத்த வெற்றி அவர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. அந்த வெற்றியை அவர்கள் வெளியரங்கில் குறிப்பாக டெல்லியிலும் ஜநாவிலும் ஒரு மக்கள் ஆணையாக காட்டி பேசுகிறார்கள்.

இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழ் மக்கள் தங்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாக அதை வியாக்கியானப்படுத்துகிறார்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் மட்டும் தமிழரசு கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம்கூட கிடைக்கவில்லை. தேசிய மக்கள் சக்திக்கு மொத்தம் மூன்று ஆசனங்கள் கிடைத்தன. அந்த வெற்றியை அடுத்த கட்டத்திற்கு விஸ்தரிப்பதன் மூலம் தமிழ் மக்களின் ஆணை தமக்கே அதிகம் உண்டு என்று அவர்கள் நிரூபிக்க முயற்சிக்கிறார்கள்.கடந்த நாடாளுமன்ற தேர்தலின் பின் தமிழ் தரப்பு எனப்படுவது தமிழ் தேசிய தரப்பு மட்டுமல்ல என்ற ஒரு வாதத்தை அவர்கள் முன்வைத்து வருகிறார்கள். அந்த வாதத்தை மேலும் பலப்படுத்துவதற்காக அவர்களுக்கு உள்ளூராட்சி சபைகளில் வெற்றி தேவைப்படுகிறது.

அந்த வெற்றியை நோக்கி அவர்கள் தீயாக வேலை செய்கிறார்கள். பலாலி பெருஞ்சாலையை திறந்ததும் அந்த நோக்கத்தோடு தான். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகளின் பின்னர் தான் ஒரு பெருஞ்சாலையை அதுவும் யாழ்குடா நாட்டின் நெஞ்சை ஊடறுத்துச் செல்லும் ஒரு பெருஞ்சாலையை திறக்க முடிகிறது என்றால் யுத்தத்தில் அவர்கள் பெற்ற வெற்றியின் பொருள் என்ன. போருக்கு பின்னரான அரசியல் என்பதன் பொருள் என்ன. நிலை மாற்றம் என்று ஐநா கூறுவதன் பொருள் என்ன? 15 ஆண்டுகளின் பின்னரும் கூட அந்தப் பாதையை முழுமையாக திறக்க முடியவில்லை என்பதை தான் அந்தப் பாதை வழியே நிறுத்தப்பட்டிருக்கும் அறிவிப்பு பலகை காட்டுகின்றது. அந்தப் பலகையில் பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

காலை 6:00 மணியிலிருந்து பிற்பகல் 6:00 மணி வரையிலும் தான் அந்த பாதையைப் பயன்படுத்தலாம். பயணிகள் பேருந்துகள் தவிர ஏனைய கனரக வாகனங்களுக்கு அனுமதி இல்லை. வாகனங்களை இடையில் நிறுத்தவோ திருப்பவோ கூடாது. வாகனங்கள் குறிப்பிட்ட வேகத்தில் தான் பயணம் செய்ய வேண்டும். வாகன சாரதிகள் தேவையான ஆவணங்கள் அனைத்தையும் கைவசம் வைத்திருக்க வேண்டும். அந்த வழியால் யாரும் நடந்து போக முடியாது. அந்த வழியில் இரு புறங்களிலும் உள்ள உயர் பாதுகாப்பு வலையத்தை யாரும் படம் எடுக்க முடியாது. இவை தான் விதிகள். இந்த விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அறிவித்தல் கூறுகின்றது.

எந்த சட்டத்தின் அடிப்படையில் அந்த அறிவித்தல் பலகை அங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்று சுமந்திரன் கேள்வி கேட்டிருக்கிறார்.

அந்த அறிவிப்பு ஏறக்குறைய போர்க் காலத்தை நினைவு படுத்துவது. ஒரு போர்க்காலத்தில் அப்படிப்பட்ட பாதையால் போகும் போது அவ்வாறான நிபந்தனைகள் விதிக்கப்படுவதுண்டு. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த 15 ஆண்டுகளின் பின்னரும் அவ்வாறான நிபந்தனைகளை விதிப்பதன் பொருள் என்ன? நாடு யாருக்குப் பயப்படுகின்றது? உயர் பாதுகாப்பு வலையங்கள் இல்லாத பாதுகாப்பான ஒரு நாட்டை ஏன் சிங்கள பௌத்த அரச கட்டமைப்பால் கட்டி எழுப்ப முடியவில்லை? சிங்கள பௌத்த அரசு சிந்தனை அல்லது மகாவம்சம் மனோநிலை எனப்படுவது எப்பொழுதும் தற்காப்பு உணர்வோடு எதிரிக்கு எதிரான அச்சத்தோடு முள்ளுக் கம்பிகளுக்குள் இருப்பது தானா?

தேர்தல் காலத்தில் பாதை திறக்கப்பட்டமை தேர்தல் நோக்கங்களைக் கொண்டதா என்று வழக்கறிஞர் கே.எஸ்.ரட்னவேல் கேள்வி எழுப்பி உள்ளார். கொழும்பில் இருந்து வெளி வரும் ஒரு பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அவர் அவ்வாறு கேட்டிருக்கிறார். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மதிப்புக்குரிய ஒரு சட்டச் செயற்பாட்டாளர் அவர்.

ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல்களை முன்னிட்டு தமிழ்ப் பகுதிகளில் காணப்பட்ட சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதையும் வீதித் தடைகள் அகற்றப்பட்டதையும் குறிப்பாக பலாலி பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தூரமான ஒரு பகுதி விடுவிக்கப்பட்டதையும் இங்கு நினைவுட்ட வேண்டும்.

ஆனால் அவ்வாறு திறக்கப்பட்ட பெரும்பாலான வீதித் தடைகளும் சோதனைச் சாவடிகளும் பின்னர் மீண்டும் தேர்தல்கள் முடிந்ததும் முளைத்து விட்டன. குறிப்பாக ஆனையிறவு மண்டைதீவின் நுழைவாயில், புங்குடுதீவின் நுழைவாயில், வன்னியில் உள்ள சோதனைச் சாவடிகள் போன்ற பல சோதனைச் சாவடிகள் அல்லது வீதித் தடைகள் மீண்டும் இயங்கத் தொடங்கி விட்டன. சில மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐநாவின் வதிவிடப் பிரதிநிதியிடம் இது தொடர்பாக சிவில் சமூகங்கள் சுட்டிக் காட்டியிருந்தன.

தேர்தல் நோக்கங்களுக்காக அரசாங்கம் பாதைகளை திறக்கின்றது. தேர்தல் தேவைகளுக்காக அரச வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தேர்தல் வெற்றியை இலக்காக வைத்து அதாவது நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மேலும் உறுதிப்படுத்தி பலப்படுத்த வேண்டும் என்ற இலக்கோடு தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் வடக்கு கிழக்கில் தீவிரமாக செயற்பட்டு வருகிறார்கள்.

வெற்றி நமதே ஊர் எமதே என்பது தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தமிழ்க் கோஷமாகக காணப்படுகிறது. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அது எதிர்பார்க்கும் வெற்றிகள் கிடைக்குமாக இருந்தால் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக கருதவில்லை. தங்களை ஒரு தேசிய இனமாக கருதவில்லை என்று அரசாங்கம் வெளி உலகத்துக்குக் கூறப்போகிறது.

தமிழ் மக்கள் இன அழிப்புக்கு எதிராக நீதியைக் கேட்கவில்லை ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தீர்வைக் கேட்கவில்லை என்றும் கூறப் போகிறது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கட்சிகள் மீது கொண்ட வெறுப்பினால் 'தெள்ளும் வேண்டாம் நாயும் வேண்டாம்' என்று வாக்களித்த தமிழ் மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசமும் வேண்டாம் என்று வாக்களிக்கப் போகிறார்களா? அல்லது தேசமாகத் திரண்டு வாக்களிக்கப் போகிறார்களா?

**– நிலாந்தன்**

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120036 F**
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Academic Advisor , Canada

**ID08119833 F**
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08118630 F**
30yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08117127 F**
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08120581 F**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120471 F**
32yrs, 5'9" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Project.. , Singapore

**ID08120453 F**
31yrs, 5'4" , Single , Poorattathi , N/A Sevai , Masters Degree , Senior Manager , Canada

**ID08120442 F**
28yrs, 5'7" , Single , Moolam , 12 Sevai , Bachelors.. , Goverment.. , Canada

**ID08120391 F**
28yrs, 5'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Service Support.. , Canada

**ID08120320 F**
29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120054 F**
34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08119833 F**
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08119603 F**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509 F**
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124 F**
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Seva , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732 F**
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728 F**
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 F**
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723 F**
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721 F**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 F**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120711 F**
30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120695 F**
28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120685 F**
22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada

**ID08120675 F**
29yrs, 5'4" , Single , Pooram , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120667 F**
25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650 F**
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

## மணமகன்



**ID08120717 M**
33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120715 M**
27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709 M**
38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120673 M**
35yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642 M**
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616 M**
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613 M**
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120474 M**
28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120335 M**
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08117127 M**
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686 M**
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120639 M**
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120583 M**
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564 M**
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356 M**
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270 M**
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144 M**
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698 M**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481 M**
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778 M**
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404 M**
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828 M**
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978 M**
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734 M**
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08120733 M**
29yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States

**ID08120731 M**
33yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Postgraduate.. , HDFC bank.. , Sri Lanka

**ID08120730 M**
28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering ,Sri Lanka

**ID08120729 M**
32yrs, 5'7" , Single , Kettai , 10 Sevai , Bachelors.. , Quantity Surveyor , United Arab Emirates

**ID08120724 M**
30yrs, 5'9" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior engineer , Sri Lanka

**ID08120720 M**
35yrs, 5'5" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Teacher , Sri Lanka

# அநுர -மோடி பற்றிக் கொண்ட கரங்களுக்குப் பின்னால்.....

அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகு, அவர் இந்தியாவுக்குச் செய்த விஜயமும் அதைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்ததும் அரசியல் நோக்கர்களிடத்தில் பலவிதமான அபிப்பிராயங்களை உருவாக்கியுள்ளது.

கூடவே சில விமர்சனங்களையும். உருவாகிய காலத்திலிருந்தே (1970 களில்) இந்திய எதிர்ப்பு உள நிலையிலிருந்த ஜே.வி.பியினரின் அரசாங்கம் இந்தியாவுடனான உறவை எப்படிப் பேணப் போகிறது? என்.பி.பியின் ஆட்சியில் இலங்கை — இந்திய உறவு நிலை எப்படி இருக்கும்? என்ற கேள்விகள் பலரிடத்திலும் எழுந்திருந்தன. மட்டுமல்ல, ஐ.எம். எவ் உடனான ஒப்பந்தத்தின் எதிர்காலம் அல்லது அதனுடைய தொடர் நடவடிக்கை, மேற்குலகத்துடனான உறவு என்பனவற்றிலும் கேள்விகள் இருந்தன. குறிப்பாக அரசியற் கட்சிகளும் அரசியல் நோக்கர்களும் இதைக் குறித்து ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் அநுரகுமார திசநாயக்க பதவியேற்ற கையோடு ஜே.வி.பியின் அடையாளத்தையே மாற்றிப் போடுவதாக இந்தியாவுக்கே முதற் பயணத்தைச் செய்தார். அதைப் போல ஐ.எம்.எவ் வுடனான தொடர் நடவடிக்கை பற்றிப் பேசினார்.

இதன் மூலம் தம்மைப் பற்றியிருந்த வெளி அபிப்பிராயத்தை மாற்றியது என்.பி.பி. அநுரவின் (என்.பி.பியின்) இந்த நடவடிக்கை பலருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. பலரும் கேள்விகளோடும் குழப்பங்களின் முன்பும் குந்தியிருந்தார்கள். எதிர்க்கட்சிகள் வழமையைப்போல கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன.

ஆனால் இதையெல்லாம் பொருட்படுத்தாமல் என். பி. பி மிக வேகமாக அதிரடி ஆட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அதிகாரத்திலிருக்கும் தரப்புகளின் பொதுக் குணம் இது. அதிகாரத்துக்கு வெளியே (அதிகாரம் இல்லாத போது) பேசியதை எல்லாம் அதிகாரத்திலிருக்கும் போது எதிர்பார்க்க முடியாது. அதிகாரம் என்பது வேறான ஒன்று. அதை விளங்குவதற்கு வரலாற்றைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

பலருக்கும் என்ன குழப்பம் என்றால், நீண்ட காலமாக இவற்றையெல்லாம் கடுமையாக எதிர்த்து வந்த ஜே.வி. பி அல்லது என்.பி.பி. இப்பொழுது எப்படிக் குத்துக் கரணமடித்து இப்படிச் சமரசத்துக்கு வந்தது? அப்படிச் சமரசத்துக்கு வந்ததைப் பற்றி அதனுடைய நியாயங்களைப் பற்றி அது பகிரங்கமாகச் சொன்னதா? அதாவது அது தன்னுடைய கொள்கை மாற்றத்தைப் பற்றிப் பொதுத்தளத்தில் எங்கேயாவது பேசியுள்ளதா? என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

எந்தக் கேள்விக்கும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவோ ஜே.வி.பியோ அல்லது என்.பி.பியோ பதிலே சொல்லவில்லை. சொல்லப் போவதுமில்லை. அவர்களைப் பொறுத்தவரை தம்மை நோக்கி எழுப்பப்படுகின்ற கேள்விகளுக்கான பதில் என்பது செயல் தான் எனக் கருதுகிறார்கள்.

அதாவது செயற்பாடு அல்லது நடவடிக்கை. எதையும் சொல்வதை விட, எதற்கும் விளக்கமளிப்பதை விட, உரிய காரியங்களைச் செய்வதே சரியானது. அதுவே அரசியற் பெறுமானமுடையது. அதுவே அவசியமானது. அதுவே பொருத்தமானது என்பது தான் அவர்களுடைய நம்பிக்கை. அதாவது தாம் ஒரு மாற்றுச் சக்தி என்பது. தமது செயல்களின் அடையாளமாகும் செயல்களின் விளைவாகும் என்ற நிலைப்பாடு. இதில் அவர்கள் எவ்வளவு தூரம் சரியாகச் செயற்படுவார்கள்? எந்தளவு வெற்றியைப் பெறுவார்கள்? எவ்வாறான மாற்றங்களை நிகழ்த்துவர்கள்? எப்படியான மாற்றங்கள் நிகழும்?

என்ற கேள்விகள் ஒரு புறமிருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் அவர்களிடம் கேட்டாலும் பதில் கிடையாது. அவர்களுடைய ஆட்சியைக் கவனித்துப் புரிந்து கொள்ள வேண்டியது தான்.



இதன்படியே தான் என்.பி.பியின் நடவடிக்கைகள் அமைகின்றன. இதற்குச் சிறந்த உதாரணம், என்.பி.பி இந்திய உறவைக் கையாள்வது அல்லது இந்தியாவைக் கையாள்வதாகும்.

முதலில் இந்தியாவுக்கும் பிறருக்கும் ஜே.வி.பியையைப் பற்றி அல்லது என்.பி.பியைப் பற்றி வெளியே இருந்த அபிப்பிராயத்தை அது மாற்றியிருக்கிறது.

உண்மையில் அநுரவின் வெற்றியையும் அதைத் தொடர்ந்து என்.பி.பி. பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற பெரும்பான்மை பலத்தையும் குறித்து இந்தியாவுக்குச் சற்றுப் பதற்றமும் குழப்பமும் ஏற்பட்டது. அநுரவும் என்.பி.பியும் சீனாவுடன் நெருங்கக் கூடும். அல்லது சீனா என்.பி.பி. அரசாங்கத்தை தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி இலங்கையில் செல்வாக்கை வலுப்படுத்தக் கூடும். இதனால் தனக்கு நெருக்கடி உண்டாகலாம் என இந்தியா பதற்றமடைந்தது.

பதவியேற்ற கையோடு இந்தியாவுக்கு முதற் பயணத்தைச் செய்து இதையெல்லாம் மாற்றிப் போட்டு விட்டார் அநுர. இதை என்.பி.பியின் சரணாகதி என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், அப்படியல்ல. இதுதான் அரசியல்.

அரசுக்கு வெளியே ஆட்சிக்கு வெளியே இருப்பது வேறு. அரசைப் பொறுப்பெடுத்து இயக்குவது வேறு. வெளியே இருக்கும்போது பலதையும் பத்தையும் பேசலாம். அப்படிப் பேசுவது சரியென்று சொல்லவில்லை. ஆனால், வெளியே இருக்கும் போது எதையும் பேசுவதற்கான சூழலும் சுதந்திரமும் இருக்கும். ஆட்சியிலிருக்கும் போது அப்படிச் செய்ய முடியாது. ஒவ்வொன்றுக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டும். பொறுப்பேற்க வேண்டும். ஆகவே ஒவ்வொன்றிலும் நிதானம் வேண்டும். ஒவ்வொன்றிலும் சரிகளைத் தவற விட்டால், அதற்கான எதிர்விளைவுகள் வந்தே தீரும். அதற்கெல்லாம் முகம் கொடுத்தே ஆக வேண்டும்.

இதேவேளை நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

என்.பி.பி என்பது கடந்த கால ஜே.வி.பி அல்ல. அது தன்னை மாற்றிக் கொண்ட ஒன்று. இன்று அது முற்றிலும் புதிய ஒன்று. அதில் பழைய ஜே.வி.பியின் சிறு குணங்கள் பிசிறுகள் இருக்கலாம். ஆனால், அதையும் விட அது மாறிய மாற்றத்துக்குள்ளான ஒரு அரசியல் இயக்கமாக, அரசியல் வடிவமாகவே உள்ளது.

ஆனால் பலரும் முந்திய ஜே.வி.பியைத் தான் இன்னமும் மனதில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் அவர்களுக்கு இன்னமும் குழப்பங்களும் கேள்விகளும் எழுகின்றன. அவர்களுடைய விமர்சனம் அந்த அடிப்படையிலானதே.

பலரும் ஒன்றைப் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். ஜே.வி.பி ஏன் என்.பி.பியாக மாற்றமடைந்தது? எப்படி அது ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய நிலைக்கு வந்தது? மட்டுமல்ல, ஏன் இவர்களில் பலரும் என்.பி.பியின் இந்தத் திடீர் வளர்ச்சியையும் அது ஆட்சியைக் கைப்பற்றியதையும் கூட இன்னமும் நம்ப முடியாமல் ஏற்றுக் கொள்ள முடியாமல் புரிந்து கொள்ள முடியாமல் தான் உள்ளனர்.

ஆனால் இதொரு மறுக்க முடியாத உண்மை. இதொரு யதார்த்தம். யாரும் ஏற்கலாம், விடலாம். ஆனால், இதொரு வெற்றி. அதாவது ஜே.வி.பியினுள் நிகழ்ந்த மாற்றம், என்.பி.பியின் வெளிப்பாடாக, வெற்றியாக வளர்ச்சியடைந்துள்ளது.

இதைப் புரிந்து கொண்டால், அநுர மோடி இருவரும் இறுகப் பற்றித் தழுவிக் கொண்டதற்குப் பின்னால்,

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –




இறுகப் பற்றிக் குலுக்கிய கைகளுக்குப் பின்னால் உள்ள அரசியலையும் யதார்த்தத்தையும் குழப்பமின்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இன்றைய சூழலில் இந்தியாவுக்கு இலங்கை மிக அவசியமானது. இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகள் பெரும்பாலும் இந்தியாவுக்கு எதிர் நிலையிலேயே உள்ளன. அல்லது இந்தியாவுக்கு மாறான உளநிலையிலேயே இருக்கின்றன. ஆகவே இலங்கையையாவது தன்னுடைய நெருக்கத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இந்தியாவுக்குள்ளது. என்பதால் தான் அது இலங்கையுடன் நிபந்தனையற்ற உறவைக் கொண்டுள்ளது. அநுரவின் ஆட்சிக்கு முன்பு, சீனாவின் மடியில்

(20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அநுர -மோடி பற்றிக் கொண்ட கரங்களுக்குப் பின்னால்.....

(19ம் பக்கத் தொடர்ச்சி) ராஜபக்சக்கள் தலையை வைத்திருந்த காலத்திலும் இந்தியா மிகப் பொறுமையாக நிதானமாக இலங்கையுடனான உறவைத் தொடர்ந்தது.

இதற்கு வாய்ப்பாக இலங்கையின் நெருக்கடிகளில் பங்கேற்கும் தரப்பாகத் தன்னைத் தொடர்ந்தும் வைத்திருக்கிறது. போரிலும் பொருளாதார நெருக்கடியிலும் இந்தியாவின் இலங்கைக்கான உதவிகளை இங்கே நினைவு கொள்வது நல்லது.

இலங்கை இந்தியாவை விட்டு மேற்குலகம், சீனா என்று சற்று விலகிச் சென்ற போதும் அதைக் கண்டும் காணாததைப் போல இருந்து கொண்டு தொடர்ந்தும் உறவிலும் உதவித் திட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது இந்த அடிப்படையிலேயே. இலங்கையோடு பகை நிலையைக் கொண்டால், அது (இலங்கை) முற்று முழுதாக சீனா, பாகிஸ்தான் என்ற இன்னொரு உறவு வளையத்துள் சென்று விடக் கூடும் என்ற அச்சம் இந்தியாவுக்குண்டு.

இந்த நிலைமை இலங்கைக்குச் சாதகமான ஒன்று. இதைப் புரிந்து கொண்டிருக்கிறது என்.பி.பி — அநுரகுமார திசநாயக்க அரசாங்கமும். தாம் எப்படி ஆட்சியைக் கைப்பற்றும் தரப்பாக மாறுதலுக்கு உட்பட்டோமோ, அதைப்போல ஆட்சியைத் தக்க வைப்பதற்கும் மாறுதல்கள் வேண்டும் என்பதே என்.பி.பியினரின் நம்பிக்கையாகும்.

எனவே தான் இந்தியாவுக்கு முதற் பயணத்தை அநுரகுமார திசநாயக்க மேற்கொண்டார். இந்திய எதிர்ப்புவாதத்தின் பின்னணியிலிருந்து வந்த ஒருவர், ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் இந்தியாவுக்கு முதல் வருகை செய்வதை இந்தியா வரவேற்றதும் இலங்கையைத் தன்னுடைய நட்பு வளையத்துள் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்ற நலன் நோக்கு அடிப்படையிலேயே. அதாவது ஒவ்வொருவருக்குமான பரஸ்பர நன்மைகள், லாபங்களின் அடிப்படையில்.

இதனால் ஜனாதிபதி அநுரவுக்கு மிகச் சிறப்பான வரவேற்பு டெல்லியில் அளிக்கப்பட்டது. இதை ஒரு நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள அநுர குமார திசநாயக்க முயற்சித்தார். குறிப்பாக இலங்கை சந்தித்திருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரு துணைக்கரமாக இந்தியாவைப் பயன்படுத்திக் கொள்ள விளைந்தார். அதற்கான தொடர்பாடலின் விளைவாக வெற்றியாக மோடியின் இலங்கைப் பயணம் அமைந்தது. மோடிக்கு இலங்கையில் செல்லுமிடமெங்கும் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டது. வழியெங்கும் நிறைந்திருந்த சனங்கள் மோடியை வாழ்த்திப் பாடினார்கள்.

இந்தப் பயணத்தில் பல விடயங்களை பேசப்பட்டன. சில விடயங்கள் இருதரப்பு உடன்பாட்டுக்குள்ளாகின. சில திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சில விடயங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.இவற்றோடு சேர்ந்து இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பு போன்ற வழமையான விவகாரங்களும் அமைந்துள்ளன.

இவையெல்லாம் இந்த ஆட்சியின் தொடக்க ஆட்டம் தான். ஏனென்றால், இந்தியாவுக்கு இலங்கையில் எத்தகைய நன்மைகள் வேண்டியிருக்கிறதோ, அதற்கு நிகராக இந்தியாவிடத்திலிருந்தும் பலவிதமான நன்மைகளைப் பெற வேண்டிய தேவை இலங்கைக்குள்ளது. என்பதால் தான் இது இருதரப்பு உறவாக உறவாடலாக இருக்கிறது. எனவே இந்தத் தொடராட்டம் மேலும் நீடிக்கப்போகிறது. திசநாயக்கவின் அரசாங்கம் முதல் ஆட்டத்தைச் சிறப்பாகவே ஆடியிருக்கிறது. எப்படி அது ஐ.எம்.எவ் வுடன் ஒரு சுமுகமான ஆட்டத்தில் உள்ளதோ, அவ்வாறே இந்தியாவுடனும் உறவாடுகிறது.

மோடியின் இந்த இலங்கைப் பயணத்தில் அவருக்கு திருப்தி ஏற்பட்டிருப்பதை மகிழ்ச்சி உண்டாகியதை அவருடைய சமூக வலைத்தளப் பதிவுகள் காட்டுகின்றன. இதற்கு முன்பு அவர் மூன்று தடவை இலங்கைக்கு வந்திருக்கிறார். ஆனால், இந்தத் தடவையே அவர் உற்சாகமாக இருந்ததாக உணர முடிகிறது. ஏதோ நீண்டகால நண்பர்களைப் போல அநுரவும் மோடியும் காட்டிய நெருக்கம் இதற்குச் சான்று.

1980களின் இறுதியில் இலங்கைத்தீவில் ஆயுதம் தாங்கிய இரண்டு அமைப்புகள் இந்தியாவைக் கடுமையாக எதிர்த்தன. ஒன்று ஜே.வி.பி. மற்றது விடுதலைப்புலிகள். ஜே.வி.பி தன்னை நெகிழ்த்தி, மாற்றியமைத்தது. அதனால் ஆட்சியைக் கைப்பற்றியது. இப்பொழுது அந்த ஆட்சியைத் திறம்பட நிகழ்த்திக் காட்ட முற்படுகிறது.

விடுதலைப்புலிகள் மாற்றத்தைப் பற்றிக் கவனத்திற்கொள்ளவில்லை. சூழலின் காலத்தின் மாற்றத்தைப் பொருட்படுத்துவதில் தவறிழைத்தது. அதனால் அது களத்தில் இருந்து அகற்றப்பட்டது.


மாக்ஸிஸத் தத்துவம் எப்போதும் வலியுறுத்துவது, மாற்றம் என்பது நிகழ்ந்தே தீரும். மாறாதவை அழிவடையும் என்பதாகும். என்.பி.பி (ஜே.வி.பி) இதைப் புரிந்துள்ளது என எண்ணலாம்.

ஆகவே, அடுத்த கட்டமாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் மேலும் பல அனுகூலங்கள் சித்திக்கக் கூடும். பல புதிய திட்டங்களுக்கான வாசல்கள் திறக்கப்படலாம். அதில் சில நெருக்கடிகளைத் தருவனவாகவும் இருக்கலாம். அதையெல்லாம் கையாள்வதுதான் அரசியல். அது தான் அரசியல் ஆளுமையும் தலைமைத்துவமும் ஆகும்.

அநுரகுமார திசநாயக்க இளைய தலைவர். என்.பி.பிக்கு இது புதிய ஆட்சி அனுபவம். ஆனாலும் விடயங்களைக் கையாள்வதில் முதிர்ச்சியான போக்குத் தென்படுகிறது. இலங்கையின் இராசதந்திரமும் கொள்கை வகுப்பாளர்களும் எப்போதும் வியப்பூட்டும் வகையில் செயற்பட்டதே வரலாறு.

தலைக்கு வருவதையெல்லாம் அவர்கள் தலைப்பாகையோடு தள்ளி விடுவார்கள். என்றபடியால்தான் இந்தச் சின்னஞ்சிறு தீவு, புவியியல் ரீதியாக நெருக்கடிப் புள்ளியிலிருந்தாலும் தன்னைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

சிந்திக்கக் கூடியவர்களின் வரலாறு எப்போதும் முன்னோக்கியே பயணிக்கும். பின்னோக்குவதில்லை. நதிகள் பின்னோக்கிப் பாய்வதில்லை. என்.பி.பி. தன்னை ஒரு நதியாக உணர்ந்துள்ளது போலும். வரலாறு அதைச் சொல்ல வேண்டும்


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300

Website: www.creditrecoverycanada.ca


**Suren Sornalingam** BBA

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832

Email: info@creditrecoverycanada.ca



# பிள்ளையான் கைது:- ஒன்றும் ஒன்றும் இரண்டா?

கட்டுரையாளர்
அழகு குணசீலன்

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு சில நாட்களாகிறது. இந்த செய்தி அறிந்து வெடிக் கொழுத்தி சித்திரைப் புத்தாண்டை முன்கூட்டியே கொண்டாடியவர்கள் இருக்கிறார்கள். பிள்ளையானுக்காக ஒப்பாரி வைக்காவிட்டாலும் கவலைப்பட்டு நினைத்து பேச கணிசமானவர்கள் நிச்சயம் இன்னும் இருக்கிறார்கள். வழக்கம் போல் இந்தக் கைது விடயத்தில் மட்டக்களப்பு சமூகம் இரண்டாக இரு வேறுபட்ட நோக்குகளுடன் பிரிந்து கிடக்கிறது.

பிள்ளையானின் கைதுக்கு பின்னணியில் அரசியல் இருக்கிறது என்பது ஒரு தரப்பினரின் பார்வை. அப்படி இல்லை இது கட்சி அரசியலுக்கு அப்பால் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதியான சட்டம், ஒழுங்கை நிலை நாட்டும், நீதி, நிர்வாகத்தை அரசியல் பிடியில் இருந்து விடுவிக்கும் மற்றொரு நடவடிக்கை என்கின்றனர் மறு தரப்பினர். இதனால் தான் இதனை ஒன்றும், ஒன்றும் இரண்டா? அல்லது அதற்கும் மேலா? என்று கேட்கவேண்டி உள்ளது.

முதலில் கைது செய்யப்பட்டதற்கு காரணம் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்பட்ட போதும், பின்னர் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் எஸ். ரவீந்திரநாத் 15, டிசம்பர். 2006 இல் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டமைக்காக இந்த கைது இடம் பெற்றதாக தெரிய வந்தது. இது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான போதுமான ஆதாரங்களையும், சட்டப்பிரிவுகளையும் கொண்டிருக்கவில்லை என்பதால் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் மூன்று நாட்கள்.: 72 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம் பெறுவதாகவே அறிய வந்தது. பின்னர் அது நீடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் பாராளுமன்றத்தில் இது பற்றி பேசிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிள்ளையானுக்கு ஈஸ்டர் படுகொலைகளோடு கணிசமான தொடர்புகள் இருப்பதாக அறிவித்தார். இது பயங்கரவாத சட்டத்திற்குள் இழுத்து விடுவதற்கான காரணம் தேடலாக இருக்க வாய்ப்புண்டு.

ஏனெனில் ஈஸ்டர் படுகொலைகள் தொடர்பாக பிள்ளையான் பல தடவைகள் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார். அப்போது அவர் சிறையில் இருந்தவர். இது குறித்து சிறைச்சாலையில் நடந்த சில நிகழ்வுகளையும் தனது நூலில் எழுதியுள்ளார். கடந்த பாராளுமன்ற தேர்தல் காலத்திலும் இது போன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். தற்போது உள்ளூராட்சி தேர்தல் பிரச்சார காலத்தில் இவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். இது ஒரு அரசியல் பின்னணியைக் கொண்டது என்பதற்கு தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி இதனை ஆதாரம் காட்டுகிறது.

இதை விடவும் கடந்த தேர்தல் காலத்தில் மட்டக்களப்பு வந்திருந்த அநுரகுமார திசாநாயக்க பிள்ளையானையும் அவரது கட்சியையும் கடுமையாக எச்சரிக்கும் தொனியில் அவரது வழமையான பாணியில் விமர்சனம் செய்திருந்தார்.

அதற்கு பதிலளித்த பிள்ளையான், எங்களுக்கு முதலில் ஆயுதம் தந்தவர்கள் ஜே.வி.பி.யினர் தான் என்றும், பின்னர் அவர்கள் ஆயுதம் கேட்ட போது நாங்கள் கொடுக்கவில்லை…… என்றும் கூறினார். பிள்ளையானின் இந்த குற்றச்சாட்டுக்கு ஜே.வி.பி. இதுவரை பதிலளித்ததாக தெரியவில்லை.



அண்மையில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு என்ற கட்சியின் பெயரை பிள்ளையான், கருணா, வியாழேந்திரனின் கட்சிகள் இணைந்து ஒரு கூட்டமைப்பாக பயன்படுத்துவது குறித்து இரு தரப்பாலும் வாதப் பிரதிவாதங்கள் முன் வைக்கப்பட்டன. இந்த பெயர் குறித்து விவாதிப்பதற்கு இப்பத்தி பொருத்தமற்றது என்பதால் இனி வரும் காலங்களில் இதற்கு வெளிச்சம் போடப்படும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினரைப் பொறுத்த மட்டில் தமிழரசுகட்சிக்கு அடுத்து என்.பி.பி.க்கு சவாலாக கிழக்கு கூட்டமைப்பு அமையும் என்று நம்புகின்றனர். இதனால் கடந்த பாராளுமன்ற தேர்தல் போன்று இப்போதும் பிள்ளையானின் தலையில் குட்ட அநுரகுமார அரசு முனைகிறது என்கிறார்கள் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்.

வியாழேந்திரன், பிள்ளையானுக்கு அடுத்து கருணா மீது புலனாய்வு பிரிவினர் பாய்வார்களா? என்ற கேள்வியும் மட்டக்களப்பில் நிலவுகிறது. ஜனாதிபதி அநுரகுமார சனிக்கிழமை மட்டக்களப்பிற்கு வந்தார். அதற்கு முன்னர் திட்டமிட்டு, கணக்கு பார்த்து பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரது ஆதரவாளர்கள் நம்புகின்றனர்.

இந்த கணக்கு பார்ப்பில் கவனிக்கத்தக்கது என்னவெனில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தற்போது நீதிமன்ற விடுமுறை காலமாகும். ஏப்ரல் 22 ம் திகதியே நீதிமன்றங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கும் இதுவும் திட்டமிட்ட அரசியல் பழிவாங்கல் என்கிறது ரி.எம்.வி.பி ஆக, பிள்ளையான் இல்லாத மட்டக்களப்புக்கு வருவதும், ஈஸ்டர் படுகொலையை அரசியல் பிரச்சாரமாக்குவதும் ஜனாதிபதியின் உள்திட்டம் என்று கூறுகிறார்கள் அவர்கள்.

முதலாவது தரப்பினரின் கருத்துக்களை வடிகட்டியதில் கிடைத்த மற்றொரு தகவல் வடக்கில் என்.பி.பி. தனது ஆதரவை அதிகரிக்க புலம் பெயர்ந்த தமிழர்களின் ஆதரவை நாடியிருப்பதாகவும், அந்த டயஸ் போராவின் நிபந்தனையை நிறைவு செய்யவே, பிள்ளையான் கைது, வீதித்தடை நீக்கம் போன்றவை இடம் பெறுகின்றனவாம். தமிழ் டயஸ்போராவின் நிபந்தனைகளில் டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் ஆகியோர், உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் கைது செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்த தகவல் ஒன்றில் அறியக்கிடைத்தது.

டக்ளஸ் தேவானந்தா ஊழல், இலஞ்சம் மற்றும் சிறிதர் தியேட்டர் சொத்து சேர்ப்பு சம்பந்தமாகவும், சித்தார்த்தன் அவரது புளட் இயக்க தோழர், ஊடகவியலாளர் தராகி சிவராம் கொலை தொடர்பாகவும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படலாம் என்றும் கதையடிபடுகிறதாம். என்.பி.பி. வடக்கில் பாராளுமன்றமன்ற தேர்தலில் கிடைத்த ஆதரவை தக்க வைக்க முயற்சிக்கிறது. எனினும் எப்படித்தான் இருந்தாலும் புலிகளை எதிர்த்து, உயிரைப்பணயம்வைத்து ஒற்றை ஆட்சிக்குள் ஒரு தீர்வை வலியுறுத்தியவர் டக்ளஸ் கொமறாட் என்று அநுரகுமார கருதுவதாகவும் ஒரு கசிவு தகவல் உண்டு.

இது இவ்வாறு இருக்க தமிழ்த் தேசிய வெடித் தரப்பும், அரசாங்கத் தரப்பும் பிள்ளையான் கைது செய்யப்பட்டதில் சத்தியமாக அரசியல் பின்னணி இல்லை என்று தலையில் அடித்து சத்தியம் செய்து வருகிறார்கள். அண்மையில் தென்னிலங்கையில் பேசிய பிரதி அமைச்சர் ஒருவர் திறைசேரி அந்நியச் செலாவணி இருப்பு குறித்து அம்பே அப்பே என்று அம்மா மேல் சத்தியம் செய்தது போல் இல்லாமல் இவர்களின் சத்தியம் இருந்தால் சரி தான்.

என்.பி.பி. அரசாங்கத்தின் இலஞ்ச, ஊழல் அற்ற, நீதி, நிர்வாகத்தில் சுதந்திர செயற்பாட்டை கொச்சைப்படுத்தும் வகையில் இந்தப் பிரச்சாரம் அரசாங்கத்திற்கு எதிராக திட்டமிட்டு மேற் கொள்ளப்படுகிறது என்று அவர்கள் நம்புகின்றனர். ராஜபக்சாக்களின் சொத்து சேகரிப்பு, ஈஸ்டர், பட்டலந்த படுகொலைகள் போன்று படிப்படியாக ஒவ்வொன்றும் வெளிச்சத்திற்கு வரும் என்று வாதிடுகின்றனர். அப்படியானால் அரசாங்க அரசியல் வாதிகள் அடிக்கடி கைதுகள் குறித்து முன்கூட்டியே பேசுகின்றனரே அரசியல் தலையீடு இல்லாத நீதி நிர்வாகத்தில் இது எப்படி சாத்தியம் என்றும் மறு தரப்பு கேட்கிறது. முன்னாள் தமிழ்த்தேசிய ஜனாதிபதி பொதுவேட்பாளர் அரியநேத்திரன் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் உள்ளவர்கள் பிள்ளையான் கருணா குழுவினரால் கொலை செய்யப்பட்டவர்கள் என்று பிள்ளையானின் கைதை நியாயப்படுத்தியுள்ளார். அதைப் படித்த போது இஸ்ரேல் மொசாட் புலனாய்வு பிரிவின் தலைவர் ஒருவர் முக அடையாளத்தை மறைக்க ஒரு கண்ணை மறைத்து இருப்பார். அது தான் நினைவுக்கு வந்தது. அந்த அதிகாரியின் பெயர் தயான்.

அது போன்று ஒரு கண்ணால் பார்த்ததாலோ என்னவோ அரியத்தாருக்கு புலிகள் செய்த கொலைகள் / கொலை முயற்சிகள் தெரியவில்லை. அந்த பட்டியலில் அ.தங்கத்துரை, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பையா, முன்னாள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மௌனகுருசாமி, கிங்ஸ்லி இராசநாயகம், சம்பந்த மூர்த்தி, ராஜன் சத்தியமூர்த்தி, நிமலன் சௌந்தரநாயகம், சாம்.தம்பி முத்து, வாசுதேவா போன்றவர்கள் மீதான கொலைகள் அவருக்கு தெரியவில்லை.

இதில் வேடிக்கை என்ன வெனில் அனேகர் தமிழரசுக் கட்சிக்காரர், தமிழ்த்தேசிய ஆதரவாளர்கள், அவரின் சக பாராளுமன்ற உறுப்பினர்கள். இப்படி அரசியல் செய்வதால் தான் தமிழரசு இன்று சின்னவீடு ஆகி இருக்கிறது. சங்கு சின்னத்தில் ஜனாதிபதிக்கு போட்டியிட்டதால் சந்திரா பெர்னாண்டோ, வணசிங்கா, ஊடகவியலாளர் நித்தியின் கொலைகள் தாக்குதல்களையும் மறக்க வேண்டியதாயிற்று.

இந்த நாட்டில் மொத்தமாக 50 ஆண்டு காலமாக ஆயுத வன்முறை நிலவியது. இன்னும் நிலவுகிறது. ஜே.வி.பி.யும், தமிழ் இளைஞர்களும் அவரவர் அரசியல் நோக்கை அடைவதற்காக ஆயுதம் தூக்கி ஆயிரக் கணக்கான படுகொலைகளை செய்து இறுதியில் தோற்றுப் போயினர். இவ்வாறான சூழலில் பல்வேறு சிறிய ஆயுதக்குழுக்களும், அரசாங்க படைகளுடன் சேர்ந்து செயற்படும் குழுக்களும், ஊர்காவற்படைகளும் இருந்தது வெளிப்படை.

கலவர காலத்தில் ஜனநாயக அரசாங்கமோ, சட்டம் ஒழுங்கோ நாட்டில் இருக்கவில்லை. ஆயுத மேந்தியோர் ரில்வின் சில்வா சொல்வது போல் என்ன காரணத்தை சொன்னாலும் இந்த ஜனநாயக ரீதியான, நிறுவன ரீதியான கட்டமைப்புக்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டனர். இதன் போது மனித உரிமைகள் மீறல், ஜனநாயக மறுப்புக்கள், கொலைகள், கொள்ளைகள் சட்டமறுப்புக்கள், மீறல்கள் உள் நாட்டு போர் நடந்த நாடுகள் போன்று இலங்கையிலும் இடம் பெற்றன. இந்த கொடூரத்திற்கான பொறுப்பை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கவேண்டும். இவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட்டு பாதிக்கப் பட்ட அனைவருக்கும் நீதி நிலை நாட்டப்பட வேண்டும். என்பதில் வேறு கருத்துகள் இல்லை.

அப்படி இல்லாமல் இனப்படுகொலை அழிவுகளையும் இறுதி யுத்த அழிவுகளையும் செய்த அரசபயங்கரவாத இராணுவ இயந்திரத்தை பாதுகாத்துக் கொண்டு என்.பி.பி.யினால்

(22ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசிராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். உத்யோகத்தில் அடுத்த வரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.

ரிஷபராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உததியோகத்தில் எதிர் பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.

மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானம் தேவை.

கடகராசி அன்பர்களே! தேவையற்ற வீண் படபடப்பு ஏற்படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும்.

சிம்மராசி அன்பர்களே! வீண் மனக்கவலைகள் நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான செயலில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

கன்னிராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.

துலாம் ராசி அன்பர்களே1 சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்களில் வேகம் பிறக்கும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதுரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும்.

விருச்சிகராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மன வருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப் பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம்.



தனுசுராசி அன்பர்களே! பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் மூலம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக் கிடையே இருந்த இடைவெளி குறையும்.

மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.

கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும். வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தைகளில் நிதானம் அவசியம்.

மீனராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# பிள்ளையான் கைது:- ஒன்றும் ஒன்றும்

(21ம் பக்கம் பார்க்க) எவ்வாறு நீதியை நிலைநாட்ட முடியும். எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜே.வி.பி.னால் கொல்லப்பட்ட 1300 பேரின் பட்டியலை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். இதற்கு ஜே.வி.பியின் நீதி என்ன? இது வரை கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மட்டுமே எம்.பி. இது இழகிய இரும்பை கொல்லன் ஓங்கி அடிக்கும் கதை. புதிய அதிகாரம் பழைய அதிகாரத்தை பாதுகாத்தல். இளம் ராசபக்சாக்கள் மட்டும் விசாரணை என்று அழைக்கப்பட்டார்கள், எதுவும் நடக்கவில்லை. மகிந்த ராஜபக்சவை அரசாங்க வீட்டில் இருந்து கூட எழுப்ப முடியவில்லை. அமைச்சர் பிமல் ரத்நாயக்க சர்வதேச ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க மீது பட்டலந்த விடயத்தில் நடவடிக்கை எடுப்போம் என்று கூறியுள்ளார். அரியநேத்திரனின் கண் மறைப்பை தான் இவரும் செய்துள்ளா. இறுதி யுத்தகால அழிவை விசாரிக்க உள்ளக பொறிமுறை தான் என்று சர்வதேச பொறிமுறையை நிராகரித்தவர்கள், ஆனால் ஜே.வி.பி.க்கு எதிரான பட்டலந்தை கொலைகளை விசாரிக்கவும் ரணிலுக்கு தண்டனை வழங்கவும் சர்வதேச ஆதரவை பெறப் போகிறார்கள். இதற்கு பெயர் இனவாதத்திற்கு இந்த நாட்டில் இனி இடமில்லை? இங்கு எப்படி ஒன்றும், ஒன்றும் இரண்டாகும்.......?

# அநுரா யாரோடு?

(15ம் பக்கத் தொடர்ச்சி) தத்தமது நாடுகளில் ஆதிக்கம் செலுத்திய உயர் குழாத்துக்கும் எதிரானவை. இந்த இரண்டு ஜதீகப் பண்புமிக்க தலைவர்களும் தென்னாசியாவின் எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடும்.

இப்படிப்பட்ட பிராந்தியக் கனவு ஏதாவது தேசிய மக்கள் சக்தியிடம் இருக்குமாக இருந்தால் முதலில் அவர்கள் உள்நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். ஏனென்றால் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால் முழு இலங்கைக்கும் பாதுகாப்பு இல்லை மட்டுமல்ல இந்தப் பிராந்தியத்துக்கும் பாதுகாப்பு இல்லை என்பது தான் கடந்த 15 ஆண்டுகால அனுபவமாக உள்ளது.

# வடக்கு கிழக்கு தமிழர்களை மையப்படுத்திய

(9ம் பக்கத் தொடர்ச்சி) இந்த நிலைமையானது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் ஆபத்தானதொரு சூழலாகும். ஏனென்றால், அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாட்டை கையிலெடுத்தால் மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளது.

அவ்விதமானதொரு சூழல் ஏற்பட்டால் பிரதமர் மோடியின் அடுத்த இலங்கைக்கான பயணத்தின்போது அவர் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று கூடக் கோரிக்கை விடுக்கான நிலைமைகளே ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே தற்போதைய சூழலை தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொண்டு தமது பழைய சித்தாந்தங்களை கைவிட்டு நடைமுறைச் சாத்தியமான விடயங்களுக்கான டில்லியுடன் மீள் ஊடாட்டத்துக்குச் செல்ல வேண்டியது அவசியமாகின்றது என்றார்.

# எல்லையின் பேய்கள்:- பிள்ளையானின்...

(7ம் பக்கத் தொடர்ச்சி) நிலையை உறுதி செய்துகொள்வதற்கு இந்த படுகொலைகள் உதவின. மேலும் இந்த படுகொலைகள் அவர்களிற்கு அரசியல் ரீதியில் சட்டபூர்வமான தன்மை கிடைப்பதற்கும் இறுதியில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி கிடைப்பதற்கும் வழிவகுத்தன. ஒரு பரந்துபட்ட அரச பொறிமுறையை பொறுத்தவரை இந்த சம்பவங்கள் விடுதலைப்புலிகளை அவமானப்படுத்துவதற்கும் ஐக்கிய இலங்கைக்கான அரசாங்கத்தின் முயற்சிகளிற்கு சர்வதேச ஆதரவை பெற்றுக்கொடுப்பதற்கும் உதவின.




# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



# பிள்ளையானின் கைதால் ரணில் - கம்மன்பில கலக்கம் அடைவது ஏன்? ரில்வின் கேள்வி!



பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனை கைது செய்தவுடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஏன் கலக்கமடைய வேண்டும். பல குற்றங்களின் பின்னணியில் அரசியல் உள்ளது. உதய கம்மன்பிலவின் சிங்கள, பௌத்தவாதம் தற்போது காணாமல் போயுள்ளதென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

காலி பகுதியில் 17 ஏப்ரல் 2025 நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

தோல்வியடைந்த அரசியல் கட்டமைப்பை புறக்கணித்து தான் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி தலைமையில் பலமான அரச கட்டமைப்பை உருவாக்கினார்கள். ஊழல், மோசடிகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில், மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அனைவரும் தற்போது ஒன்றிணைந்துள்ளார்கள்.

அரசாங்கத்தின் சிறந்த பயணத்துக்கு தடையாக செயற்படுகிறார்கள். ஆட்சிக்கு வந்து 6 மாத காலத்துக்குள் நிலையான சிறந்த அபிவிருத்திக்கான அடித்தளமிட்டுள்ளோம். ஆகவே அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்று தோல்வியடைந்தவர்கள் மாத்திரம் தான் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டமை தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ஒருவரை கடத்தி காணாமலாக்கிய குற்றச்சாட்டுக்காகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டு, தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பிள்ளையானை சந்திப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி கோரினார். அவர் முன்னாள் ஜனாதிபதியாக பதவி வகித்ததற்காக சட்டத்துக்கு முரணாக செயற்பட இடமளிக்க முடியாது. நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகவே உள்ளது. இவ்வாறான நிலையில் பிள்ளையானுடன் பேசுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் பிள்ளையானை சந்திப்பதற்கு உதய கம்மன்பில அனுமதி கோரியுள்ளார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதன் பின்னர் பிள்ளையான் சார்பில் தான் சட்டத்தரணியாக முன்னிலையாகுவதாக குறிப்பிட்டு, பிள்ளையானை சந்தித்துள்ளார்.

பிள்ளையான் சார்பில் முன்னிலையாகுவதாக உதய கம்மன்பில குறிப்பிடுகிறார். உதய கம்மன்பில சட்டத்தரணியாக இருக்கலாம். ஆனால் அவர் எந்த வழக்குக்காகவும் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. நாட்டு மக்கள் இதனை நன்கு அறிவார்கள். பிள்ளையானை கைது செய்தவுடன் ரணில் விக்கிரமசிங்க, உதய கம்மன்பில ஆகியோர் கலக்கமடைந்துள்ளனர்.

உதய கம்மன்பில கடந்த காலங்களில் சிங்கள பௌத்தவாதம், இனவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியே அரசியல் செய்தார். அத்தகையவர் பிள்ளையான் தேசிய வீரன் என்று புகழ் பாடுகிறார். அவரது தேசிய அரசியல் தோல்வியடைந்துள்ளது. கடந்த கால குற்றங்களின் பின்னணியில் அரசியல் பின்னணிகள் பல உள்ளன என்றார்.

இதேவேளை சட்டத்தரணி என்ற போர்வையில் ஒரு அரசியல்வாதியாகவே முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனை (பிள்ளையானை) உதய கம்மன்பில சிறையில் வைத்து சந்தித்துள்ளார் என சுகாதார, வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

உதய கம்மன்பில நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்காடியதை அனேகமாக பொதுமக்கள் கண்டிருக்க முடியாது. இந்நிலையில் அவர் பிள்ளையானுக்காக ஆஜராகும் ஒரு சட்டத்தரணியாகக் தன்னைக் கூறிக் கொண்டு அவரை சந்தித்ததில் வேறு கதைகளும் இருக்கலாம். பிள்ளையானுக்கு, உதய கம்மன்பில சட்டத்தரணியான தன் ஊடாக முன்னைய காலங்களில் எந்தளவு ஊழல் மோசடிகள் இடம் பெற்றுள்ளன என்பதை ஊகிக்க முடியும். பிரபலமான வழங்குகளில் சட்டத்தரணியாகத் தொழிற்படாத ஒருவர் இப்படி இந்த வழக்கிற்கு திடீர் எனத் தோன்ற முற்பட்டார் என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

முன்னைய காலங்களில் கீழே ஒதுக்கப்பட்ட பல்வேறு ஊழல்களுக்கான கோவைகள் தற்போது மேல் எடுக்கப்பட்டு குற்றத்தடுப்பு மற்றும் மோசடி ஒழிப்புப் பிரிவினர் செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

சட்டரீதியாகச் செய்ய வேண்டியவைகளை நீதித்துறை மேற் கொள்கிறது. அரசு என்ற வகையில் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வேலையை மட்டுமே அரசு செய்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.